விலை ரூ. 5

http://www.cgpi.org வருகின்ற புரட்சிகர சூறாவளிகளுக்குத் தயாராகுவோம்

# தொழிலாளர் ஒற்றுமைக் குரல்

இந்திய கம்யூனிஸ்டு கெதர் கட்சி – மத்தியக் குழுவின் இதழ்



பாகம் 8 - இதழ் 4 | ஏப்ரல், 2017 | மாத இதழ்

**2017 சர்வதேச மகளிர் தினம்:**

## ஒரு புதிய அரசையும், அமைப்பையும் உருவாக்கும் குறிக்கோளோடு தங்களுடைய போராட்டத்தைப் பெண்கள் தீவிரப்படுத்த வேண்டும்

### இந்திய கம்யூனிஸ்டு கெதர் கட்சி மத்தியக் குழுவின் அறைகூவல், பிப்ரவரி 27, 2017

மார்ச் 8-இல், தங்களுடைய உரிமைகளையும், எல்லா மக்களுடைய உரிமைகளையும் நிலைநாட்டிக் கொள்வதற்காக இந்திய மற்றும் எல்லா நாட்டுப் பெண்களும் மேற் கொள்ளும் இடைவிடாத, வீரமான போராட்டங்களை கம்யூனிஸ்டு கெதர் கட்சி போற்றுகிறது. முதலாளித்துவச் சுரண்டல், ஏகாதிபத்தியப் போர்கள், இனவாதம், அரசு பயங்கரவாதம் மற்றும் மக்கள் மீது நடத்தப்படும் எல்லா வகையான ஒடுக்குமுறைக்கும் பாகுபாட்டிற்கும் எதிரான மாபெரும் ஆர்பாட்டங்களின் முன்னணியில் இருந்து பெண்கள் உலகெங்கிலும் போராடி வருகின்றனர். தொழிலாளர்களுடைய வேலை நிறுத்தப் போராட்டங்கள், உழவர்கள் மற்றும் இளைஞர்களுடைய இயக்கங்களின் ஒரு அங்கமாக அவர்கள் இருந்து வருகிறார்கள். பன்னாட்டு நிறுவனங்களாலும், ஏகாதிபத்திய அரசுகளாலும் தாக்கப்பட்டு வரும் தேசிய உரிமைகளைப் பாதுகாக்கும் போராட்டத்தில் பெண்கள் முக்கிய பங்காளர்களாக இருந்து வருகின்றனர். பரந்துபட்ட சீரழிவையும், போர்ப் பகுதிகளிலிருந்து இலட்சக் கணக்கான அகதிகள் தப்பி ஒடி வரும் நிலையையும் உருவாக்கி அமெரிக்க ஏகாதிபத்தியமும், அதனுடைய கூட்டாளிகளும் நடத்திவரும் அநியாயமானப் போர்களை அவர்கள் எதிர்த்து வருகின்றனர்.

மக்கள் திரள் ஆர்பாட்டங்களிலும், தனியார்மயம், தாராளமயம், உலகமயமாக்கலுக்கு எதிராக தொடர்ந்து வருகின்ற ஆர்பாட்டங்களிலும் இந்திய மகளிர் முன்னணியில் பங்கேற்று வருகின்றனர். பெரும் தொழில் நிறுவனங்களிலிருந்து சிறிய தொழிற்சாலைகள் வரை ஒவ்வொரு வேலை செய்யும் இடங்களிலும் தொழிற் சட்டங்களில் தொழிலாளர்களுக்கு எதிராக செய்யப்படும் திருத்தங்களுக்கு எதிராக அவர்கள் குரலெழுப்பி வருகின்றனர். தொழிலாளர்கள் என்பதாலே தங்களுக்கு உரிய அனைத்து உரிமைகளும் கொடுக்கப்பட வேண்டுமென ஆசிரியர்களும், செவிலியர்களும், ஆங்கன்வாடி மற்றும் ஆஷா தொழிலாளர்களும் கோரி வருகின்றனர்.

சமுதாயத்தில் பெண்களை இழிவாக நடத்திவரும் நிலவுடமைப் பழக்க வழக்கங்களையும், காலாவதியான கருத்துக்களையும் எதிர்த்து நமது நாட்டுப் பெண்கள் கேள்வி எழுப்பி வருகின்றனர். பெண்கள் என்ற அடிப்படையிலும், மனிதர்கள் என்பதாலும் தங்களுடைய எல்லா உரிமைகளுக்கும் உத்திரவாதமளிக்கக் கூடிய நவீன சட்டங்களை அவர்கள் கோருகிறார்கள்.

வகுப்புவாத வன்முறைக்கும், அரசு பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தின் முன்னணியில் பெண்கள் இருந்து வருகிறார்கள். காஷ்மீர், வட கிழக்கு, சந்தீஸ்கர் அல்லது பிற "கலவரப் பகுதி"களிலும், இராணுவ ஆட்சிக்கு எதிராக பெண்கள் வீரமாகப் போராடி வருகின்றனர்.

தற்போதுள்ள அரசும், அது பாதுகாக்கும் பொருளாதார அமைப்பும் பெண்கள் விடுதலை பெறுவதற்கு முக்கிய தடைக்கற்களாக இருக்கின்றன என வாழ்க்கை அனுபவம்

*தொடர்ச்சி பக்கம் 6 ...*

## பகத் சிங்கின் அறைகூவலை ஏற்றுக் கொள்வது என்றால், புரட்சிக்காகவும் சோசலிசத்திற்காகவும் வேலை செய்ய முன்வர வேண்டும்!

### இந்திய கம்யூனிஸ்டு கெதர் கட்சி மத்தியக் குழுவின் அறிக்கை மார்ச் 4, 2017

1931 மார்ச் 23 அன்று ஆங்கிலேய அரசாங்கம் பகத் சிங், சுக்தேவ் மற்றும் ராஜ்குரு ஆகிய வீரத் தியாகிகளை தூக்கிலிட்டுக் கொன்றது. புரட்சி மற்றும் சோசலிச இந்தியா என்ற குறிக்கோளிற்காகப் போராடி தம் இன்னுயிரை நீத்த இந்த வீரத் தியாகிகளுடைய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக எல்லா இந்தியப் புரட்சியாளர்களும் இருமடங்கு சக்தியோடு போராடுவதற்கு தங்களுடைய உறுதியைப் புதுப்பித்துக் கொள்வதற்கான ஒரு நாளாகும் இது.

இதே நாளில் ஓராண்டிற்கு முன்னர், "தங்களுக்குப் பின்வரும் சந்ததியினர் சுதந்திரக் காற்றை சுவாசிப்பதற்காக, இந்த மூன்று வீரமான இளைஞர்களும், தங்களுடைய இளம் வயதிலேயே தங்கள் வாழ்க்கையைத் தியாகம் செய்தனர்" என்று பிரதமர் மோடி டிவீட்டரில் கூறியிருக்கிறார்.

காலனிய ஆட்சி 70 ஆண்டுகளுக்கு முன்னர் முடிவுக்கு வந்திருந்தும், இன்றும் கூட பெரும்பான்மையான இந்தியர்கள் சுதந்திரக் காற்றை சுவாசிக்க வில்லை என்பதை உண்மைகள் வெளிப்படுத்துகின்றன. வேலை கிடைக்காத நிலையிலிருந்தும், பணவீக்கம், வேலை செய்யும் இடங்களில் கடுமையான சுரண்டல் ஆகியவற்றிலிருந்து தொழிலாளர்கள் விடுதலை பெறவில்லை. வாழ்வாதாரம் நிலையற்று இருப்பதிலிருந்தும், பெரும் நிறுவனங்களுடைய நலன்களுக்காக தங்களுடைய நிலங்கள் பறிக்கப்படும் அச்சுறுத்தலிலிருந்தும் உழவர்கள் விடுதலை பெறவில்லை. பெண்கள், பழைய மற்றும் புதிய வகையான பாகுபாடுகள், ஒடுக்குமுறை, வன்முறையிலிருந்து விடுதலை பெறவில்லை. அரசியல் பிரச்சனைகளைப் பல்கலைக் கழகங்களில் விவாதிப்பதற்குக் கூட இளம் மாணவர்களுக்குச் சுதந்திரமில்லை. அரசு மற்றும் தனிப்பட்ட பயங்கரவாதம், ரவுடித்தனத்திலிருந்து சமுகச் சூழல் விடுதலை பெறவில்லை. தாழ்த்தப்பட்ட சாதி மக்கள், பாகுபாட்டிலிருந்தும், சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்படுவதிலிருந்தும் விடுதலை பெற வில்லை. வகுப்புவாத வன்முறையிலிருந்து மதக் குழுக்களுக்கு சுதந்திரம் கிடைக்கவில்லை.

நமது நாட்டின் ஒரு சிறுபான்மையான பெரு முதலாளிகளும், பெரும் நிலவுடமையாளர்களும், பிற இரத்தம் உறிஞ்சும் ஒட்டுண்ணிகளும் மட்டுமே அன்னிய முதலாளிகளுடன் கூட்டாக மற்றவர்களைச் சுரண்டவும், கொள்ளையடிக்கவும் வரைமுறையற்ற சுதந்திரத்தை அனுபவித்து வருகின்றனர். உலக நிதி மூலதனம் மற்றும் ஏகாதிபத்திய அமைப்பின் உடும்புப் பிடியிலிருந்து இந்தியப் பொருளாதாரம் விடுதலை பெறவில்லை.

பகத் சிங்கும், அவருடைய தோழர்களும் உயிர்த் தியாகம் செய்தது, இப்படிப்பட்ட சுதந்திரமற்ற இந்தியாவிற்காக அல்ல.

"நம்முடைய மக்களுடைய உழைப்பையும் வளங்களையும் ஒரு சில அன்னியர்களோ அல்லது நமது நாட்டைச் சேர்ந்தவர்களோ அல்லது இருவரும் கூட்டாகவோ சுரண்டி வருவது நீடிக்கும் வரை நம்முடைய போராட்டம் தொடரும். இந்தப் பாதையிலிருந்து எதுவுமே நம்மைத் தடுக்க முடியாது." புரட்சியாளர்களுடைய இந்த வார்த்தைகளை, பகத் சிங்கும் அவருடைய தோழர்களும் பல முறை திரும்பத் திரும்ப விரும்பிக் கூறி வந்திருக்கின்றனர். இவை விழிப்புணர்வு கொண்ட ஒவ்வொரு இந்தியர்களின் கவனத்தையும் இன்று ஈர்த்து வருகிறது.

நமது மக்களுடைய உழைப்பும், வளங்களும் இன்றும் கூட நமது நாட்டு மற்றும் அன்னிய முதலாளிகளால் சுரண்டப்பட்டும்,

*தொடர்ச்சி பக்கம் 2 ...*

**இந்த இதழில் ...**

| | |
|---|---|
| "ஒப்புதலை" இட்டுக்கட்ட தேர்தல்கள் | 3 |
| வங்கி நெருக்கடிக்கு தீர்வு சமூகமயம் | 4 |
| தனியார்மயத்தை தீவிரப்படுத்தல் | 5 |
| அரசியல் விவாதங்களுக்குத் தடை | 5 |
| சர்வ தேச மகளிர் தின வரலாறு | 7 |
| அடிப்படை சீர்திருத்தங்களுக்கு இயக்கம் | 8 |
| எண்ணெய் தேடுதல் - ஆர்பாட்டம் | 8 |

**பகத் சிங்கினுடைய அறைகூவலை ...**

முதல் பக்க தொடர்ச்சி

சூறையாடப்பட்டும் வருகிறது என்பதை யாராலும் மறுக்க முடியாது. எனவே நமது புரட்சிகர வீரத் தியாகிகள் எதிர்பார்த்தது போலவே, எல்லா வகையான சுரண்டலிலிருந்தும், ஒடுக்குமுறையிலிருந்தும் விடுதலை பெறுவதற்கான போராட்டம் இன்றும் தொடர்கிறது.

மக்களுடைய ஆயுதந்தாங்கிய கிளர்ச்சியின் மூலம், ஆங்கிலேயர்களுடைய காலனிய ஆட்சியைத் தூக்கியெறிவதற்காக 1913-இல் உருவாக்கப்பட்ட இந்தியர்களுடைய முதல் புரட்சிகர அரசியல் கட்சியான இந்துஸ்தான் கெதர் கட்சியின் கருத்துக்களாலும், செயல்களாலும் பகத் சிங் புத்துணர்வு பெற்றார். இரசியாவின் மாபெரும் அக்டோபர் புரட்சியாலும், இருபதுகளில் சோவியத் யூனியனில் இருந்தது. இந்தக் கட்சிகள், ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தின் வகுப்புவாத பிரித்தாளும் சூழ்ச்சியின் அங்கமாகச் செயல்பட்டன. அதன் விளைவாக, பகுதிகளை விருப்பப்பட்டவாறு பிரித்தும் , பஞ்சாப் மற்றும் வங்காள தேசங்களை உடைத்தும் ஒரு "இந்து பெரும்பான்மை" அரசும், ஒரு "முஸ்லீம் பெரும்பான்மை" அரசும், உருவாக்கப்பட்டன.

காலனிய ஆட்சியில் தங்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென கோரிய காங்கிரசு, முஸ்லீம் லீக் கட்சிகளைப் போலின்றி, ஆங்கிலேய காலனியத்தை முழுவதுமாகத் தூக்கியெறிய வேண்டுமென்ற சமரசமற்ற போராட்டத்தை மேற் கொண்டதற்காக பகத் சிங், இராஜ்குரு மற்றும் சுக்தேவை ஆங்கிலேய கொடுங்கோலர்கள் தூக்கிலிட்டனர். பகத் சிங் மற்றும் அவருடைய தோழர்களுடைய புரட்சிகர நிலைப்பாடு, காலனிய அரசை அச்சுறுத்தியதால் அவர்களுக்குத் தூக்கு

தச்சர்கள் ஒண்ட இடமின்றி குடிசைகளில் வாழ்ந்து வருகிறார்கள். சமுதாயத்தின் இரத்தம் உறிஞ்சும் ஒட்டுண்ணிகளாக இருக்கும் முதலாளிகளும், சுரண்டலதிபர்களும் தம் விருப்பம் போல கோடிக்கணக்கில் ஊதாரித்தனமாக செலவழித்து வருகிறார்கள். மோசமான இந்த ஏற்றத்தாழ்வுகளும், வலுக்கட்டாயமான பாகுபாடுகளும் குழப்பதற்கு நிச்சயமாகக் கொண்டு செல்லும். இப்படிப்பட்ட சூழ்நிலை வெகு காலத்திற்கு நீடிக்க முடியாது....

"இந்த நாகரிகத்தின் முழு கட்டுமானத்தையும் விரைவில் காப்பாற்றவில்லையானால், அது உடைந்து நொறுங்குவது உறுதி. எனவே, ஒரு அடிப்படையான மாற்றம் அவசியமாகும். இதை உணர்ந்து கொள்பவர்களுடைய கடமை, சமுதாயத்தை சோசலிச அடிப்படையில் திருத்தி அமைக்க வேண்டியதாகும். இதைச் செய்தாலன்றி, மனிதனை மனிதன் சுரண்டுவதும், நாடுகளை

## பகத் சிங் மற்றும் தோழர்களின் நினைவாக சென்னையில் பொதுக் கூட்டம்

சென்னை பதுவஞ்சேரியில் வீரத் தியாகிகள் பகத் சிங், ராஜ்குரு மற்றும் சுக்தேவ் ஆகியோருடைய நினைவு நாளாகிய மார்ச் 23 அன்று மாலை ஒரு புத்துணர்வு ஊட்டக் கூடிய பொதுக் கூட்டத்தை மக்கள் ஜனநாயகப் பேரவை நடத்தியது. இக்கூட்டத்திற்கு தோழர் லோகநாதன் தலைமை வகித்தார். கூட்டத்தில், தோழர் லோகநாதனும் தோழர்கள் கணேசன், பதுவை நடராசன், சாந்த சீலன், பாஸ்கர், இராமமூர்த்தி ஆகியோர் எழுச்சியுரையாற்றினர். இதில் அந்தப் பகுதியைச் சார்ந்த பல இளைஞர்களும் பங்கேற்று பேசி, இந்த போராட்டத்தை வீரத் தியாகிகளின் பாதையில் முன்னெடுப்போம் என்று சபதமிட்டனர்.

பகத் சிங்கினுடைய வாழ்க்கை வரலாற்றையும், அன்றைய அரசியல் சூழலையும் சுருக்கமாகக் குறிப்பிட்ட பேச்சாளர்கள், பகத் சிங் ஆங்கிலேய




காலனி அரசாங்கத்தை இந்தியாவிலிருந்து தூக்கியெறிவதற்காக மேற் கொண்ட புரட்சிகர முயற்சிகளை எடுத்துரைத்தனர். காலனிய ஆட்சி அமைப்பிலேயே தங்களுக்கும் ஒரு இடம் கொடுக்குமாறு காங்கிரசு, முஸ்லீம் லீக் போன்ற கட்சிகள் ஆங்கிலேய அரசைக் கேட்டுவந்த சூழ்நிலையில், காலனிய ஆட்சியை முழுவதுமாகத் தூக்கியெறிய வேண்டும் என பகத் சிங் மற்றும் பிற தோழர்கள் சமரசமின்றிப் போராடினர். சுரண்டல் அமைப்பிற்கு முடிவு கட்டுவதற்காகவும், உழைக்கும் மக்களுடைய ஆட்சியதிகாரத்தை அமைப்பதற்காகவும் பகத் சிங்கும், அவருடைய தோழர்களும் மேற் கொண்ட முயற்சியை இன்றைய சூழ்நிலையில் சிறிதும் பின்வாங்காமல் நாம் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்ற எழுச்சியான மையக் கருத்தோடு கூட்டம் முடிவுற்றது. ■

சோசலிசத்தின் வெற்றிகரமான முன்னேற்றத்தாலும் ஆர்வம் தூண்டப்பட்டு அதிலிருந்து பல படிப்பினைகளை அவர் பெற்றுக் கொண்டார்.

பகத் சிங், இந்துஸ்தான் ரிப்பப்லிகன் அசோசியேசனின் (எச்.ஆர்.ஏ) ஆர்வமிக்க உறுப்பினராக இருந்தார். எச்.ஆர்.ஏ பின்னர் தன்னுடைய பெயரை இந்துஸ்தான் சோசலிஸ்டு ரிப்பப்லிகன் அசோசியேசன் என்று மாற்றிக் கொண்டது. இந்தியாவில் ஆங்கிலேய காலனிய அரசை முழுவதும் அகற்றிவிட்டு, அதனுடைய இடத்தில் முழுவதுமாக புதிய ஒரு அரசைக் கட்ட வேண்டும் என்ற நோக்கத்தில் பகத் சிங் உறுதியாக இருந்தார். எச்.ஆர்.ஏ வினுடைய 1925 கொள்கை அறிக்கை, புரட்சியின் அரசியல் நோக்கமானது ஒரு இந்தியாவின் ஐக்கிய மாநிலங்களை உருவாக்குவதாகும் என்று வரையறுத்திருந்தது. அதில் ஆங்கிலேய காலனிய ஆட்சியிலிருந்து விடுதலை பெறுவதற்காக போராட்டத்தில் ஒருங்கிணைந்துள்ள பல்வேறு தேசங்கள், தேசிய இனங்கள் மற்றும் மக்களுடைய இறையாண்மையை மதிப்பதாக இருக்கும் எனத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

பகத் சிங்கினுடைய இந்த சர்வதேசியம், தற்போதைய அதிகாரபூர்வமான நிலைப்பாடாகிய இந்தியா என்பது "ஒரு தேசம்" என்பதற்கும், காஷ்மீரர்கள், பஞ்சாபியர் அல்லது வேறு எந்த அங்கத்தினரின் தேசிய உரிமைகளைப் பற்றிப் பேசும் எவரும் "தேச விரோதிகள்" என்பதற்கும் நேரெதிராக இருக்கிறது.

காலனிய எதிர்ப்புப் போராட்டத்தின் போது, பகத் சிங் மற்றும் பிற புரட்சியாளர்களுடைய பாட்டாளி வகுப்பு சர்வதேசிய உணர்வு, இந்தியாவின் பல தேசியத் தன்மையை அங்கீகரிக்க மறுத்த காங்கிரசு மற்றும் முஸ்லீம் லீக் கட்சிகளுடைய போலி நாட்டுப்பற்றிலிருந்து அப்பட்டமாக வேறுபட்டு தண்டனை கொடுத்தனர். இவர்களை எதிர்கால சந்ததியனருடைய பார்வையில் மதிப்பிழக்கச் செய்ய வேண்டும் என்பதற்காக, காலனியர்கள் இவர்களைப் "பயங்கரவாதிகளென" முத்திரை குத்தினர்.

பிரிட்டிஷ் காலனிய நீதிமன்றத்தில் தன் செயல்களை விளக்கி பகத் சிங் கொடுத்த வாதங்கள், அவர் ஒரு பயங்கரவாதியோ அல்லது காங்கிரசு - பாஜக போன்ற "தேசியவாதியோ" இல்லை என்பதைக் காட்டுகிறது. அவர், சோசலிசம் மற்றும் கம்யூனிசத்தின் வெற்றிக்காக ஏகாதிபத்தியத்திற்கும், காலனியத்திற்கும் எதிரான சமரசமற்ற புரட்சிகரப் போராளியாவார்.

நீதி மன்ற விசாரணையின் போது, புரட்சி என்றால் என்ன என்று பகத் சிங்கிடம் கேட்கப்பட்ட போது, அவர் "புரட்சி என்றால் அதில் இரத்தப் போர் இருக்க வேண்டுமென்ற கட்டாயமில்லை. அல்லது தனிப்பட்ட பழிவாங்கலுக்கும் அதில் இடமில்லை. அது குண்டு அல்லது துப்பாக்கி கலாச்சாரமும் அல்ல. அநீதியை அடிப்படையாகக் கொண்ட தற்போதைய அமைப்பு மாற வேண்டும் என்பதைத் தான் நாங்கள் புரட்சி என்கிறோம். உற்பத்தியாளர்கள் அல்லது தொழிலாளிகள், சமுதாயத்தின் மிகவும் அவசியமான அங்கமாக இருந்த போதிலும், அவர்களுடைய உழைப்பின் பயனை சுரண்டல் அதிபர்கள் திருடிக் கொண்டு, அவர்களுடைய அடிப்படை உரிமைகளை மறுத்து வருகிறார்கள்.

அனைவருக்கும் தானியங்களை உற்பத்தி செய்யும் உழவர்கள், தன் குடும்பத்தோடு பசியில் வாடுகிறார்கள். உலக சந்தைக்கு ஆடைகளை வழங்குகின்ற நெசவாளர், தங்களுடைய உடலையையும், தன் குழந்தைகளுடைய உடலையும் மூடுவதற்கு போதுமான துணியில்லாமல் இருக்கிறான். மாட மாளிகைகளைக் கட்டும் கொத்தனார்கள், கொல்லர்கள் மற்றும் நாடுகள் சுரண்டுவதும் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டாலன்றி, மனித குலத்தை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் துயரங்களையும், படுகொலைகளையும் தவிர்க்கமுடியாது. போருக்கு முடிவு கட்டுவது பற்றியும், உலகளாவிய அமைதிக்கு வழி வகுப்பது குறித்தும் பேசுவது, அப்பட்டமான ஏமாற்றாகும்.

"புரட்சி என்பதன் பொருள், இப்படிப்பட்ட நெருக்கடிகளின் அச்சுறுத்தலற்ற ஒரு சமுதாய அமைப்பை இறுதியாக நிறுவுவதாகும். அதில் பாட்டாளி வகுப்பின் இறையாண்மை அங்கீகரிக்கப்பட வேண்டும், ஒரு உலக கூட்டணி, முதலாளித்துவத்தின் அடிமைத்தளையிலிருந்தும், ஏகாதிபத்தியப் போர்களின் துயரத்திலிருந்தும் மனித இனத்தைக் காப்பாற்ற வேண்டும்.

"இதுவே எங்களுடைய குறிக்கோளாகும். இந்தக் கருத்தியலை எங்கள் உயிர் மூச்சாகக் கொண்டு, நாங்கள் ஒரு நியாயமான, வலுவான, போதுமான எச்சரிக்கையை விடுத்திருக்கிறோம். ஆனால் இதற்குச் செவி சாய்க்காமல், தற்போதைய அரசாங்க அமைப்பு, பெருகி வருகின்ற இயற்கை சக்திகளுக்கு ஒரு தடைக்கல்லாக தொடர்ந்து நீடிக்குமானால், ஒரு மோசமான போராட்டம் வெடிப்பது உறுதி. அது எல்லாத் தடைகளையும் உடைத்தெறிந்துவிட்டு, புரட்சியின் குறிக்கோளை அடைவதற்காக பாட்டாளி வகுப்பினருடைய சர்வாதிகாரத்தை நிலைநாட்டும்."

இன்று இந்திய சமுதாயத்தை மோசமாக பாதித்து வரும் பொருளாதார, அரசியல் மற்றும் சமூகப் பிரச்சனைகளின் ஆணி வேர், 1947-இல் சமூகப் புரட்சியின்றி அரசியல் சுதந்திரத்தை அளிப்பதற்காக நடந்த ஒரு மறைமுக ஒப்பந்தமான "அதிகார மாற்றத்தில்" இருக்கிறது. புரட்சிக்கான பாதையைத் தடுப்பதற்காக, சுதந்திர இந்தியாவில், காலனிய அரசு இயந்திரமும், அதனுடைய "சட்டப்படி

*தொடர்ச்சி பக்கம் 6 ...*

# பெரு முதலாளி வகுப்பின் தொழிலாளர் விரோத, உழவர் விரோத, தேச விரோத திட்டத்திற்கு ஒரு "ஒப்புதலை" இட்டுக்கட்ட தேர்தல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன

## இந்திய கம்யூனிஸ்டு கெதர் கட்சி மத்தியக் குழுவின் அறிக்கை, மார்ச் 13, 2017

உத்திரப் பிரதேசம், பஞ்சாப், மணிப்பூர், உத்திராகாண்ட் மற்றும் கோவா ஆகிய ஐந்து மாநிலத் தேர்தல்களின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. உத்திரப் பிரதேசத்திலும், உத்திராகாண்டிலும் பாஜக பெரும்பான்மையான இடங்களைக் கைப்பற்றியிருக்கிறது. மணிப்பூரிலும், கோவாவிலும் ஒரு பெரும்பான்மையை அது உற்பத்தி செய்யும். காங்கிரசு கட்சி, பஞ்சாபில் அறுதிப் பெரும்பான்மை பெற்றிருக்கிறது. இந்த முடிவுகள், ஒட்டு மொத்தத்தில் மாநிலங்கள் அவையில் பாஜக-வின் இடங்களை அதிகப்படுத்துவதன் மூலம் மத்திய பாராளுமன்றத்தில் அதனுடைய நிலையை பலப்படுத்துவதோடு, அது ஆட்சி நடத்தும் மாநிலங்களின் எண்ணிக்கையையும் அதிகரித்திருக்கிறது.

மத்தியிலுள்ள பாஜக அரசாங்கம் கடந்த இரண்டு ஆண்டுகளாக தொழிலாளர் உரிமைகள் மீது தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியிருப்பதற்கு எதிராக தொழிற் சங்கங்களின் மக்கள் திரள் எதிர்ப்பு அதிகரித்துவரும் சூழ்நிலையில் இந்தத் தேர்தல்கள் நடைபெற்றிருக்கின்றன. நாடெங்கிலும் உழவர்களின் கிளர்ச்சிகள் தீவிரமடைந்து வருகின்றன.

பெரும்பான்மையான மக்களுடைய எதிர்ப்பின் காரணமாக நிலத்தைக் கையகப்படுத்தும் சட்டம் முடங்கிக் கிடக்கிறது. தேசியம் என்ற பெயரில் சனநாயக, மனித மற்றும் தேசிய உரிமைகள் மீது நடத்தப்படும் அப்பட்டமான தாக்குதல்களுக்கு பல்கலைக் கழக மாணவர்கள், மகளிர் அமைப்புக்கள் மற்றும் பிறருடைய எதிர்ப்பு வலுத்து வருகிறது. முதலாளித்துவ வகுப்பின் சில பிரிவினரிடையே கூட அதிருப்தியும், பொறுமையற்ற அறிகுறிகளும் இருந்து வருகின்றன.

தாராளமயம், தனியார்மயம் மூலம் உலகமயமாக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் வேகத்தைத் தீவிரப்படுத்துவதற்கு "மக்களுடைய ஒப்புதலை" இட்டுக்கட்டுவதற்கு அண்மையில் நடைபெற்ற தேர்தல்களை, இந்திய மற்றும் அன்னிய ஏகபோக முதலாளிகள் பயன்படுத்திக் கொண்டுள்ளனர். பெரும்பான்மையான மக்கள் மீது, ஏகபோக முதலாளிகளுடைய காட்டுமிராண்டித் தனமான சர்வாதிகாரத்தை உறுதிப்படுத்திக் கொள்ளவும், சட்ட ரீதியானதாக அதை ஆக்கிக் கொள்ளவும் தேர்தல்கள் பயன்பட்டிருக்கின்றன.

150 முதலாளித்துவ ஏகபோகக் குடும்பங்களைத் தலைமையாகக் கொண்டுள்ள ஒரு சிறுபான்மையான முதலாளித்துவ சுரண்டல் வகுப்பினர் தாம், நமது நாட்டில் நடைபெறும் தேர்தல்களுக்கான திட்டத்தையும், தேர்தல் முடிவுகளையும் தீர்மானிக்கிறார்கள். உலகிலேயே மிகவும் மக்கள் தொகை மிகுந்த சனநாயகம் என்று அழைக்கப்படும் இது, மிகச் சிறுபான்மையாக இருக்கும் செல்வாக்கு பெற்ற ஏகபோக முதலாளிகளே திட்டங்களைத் தீர்மானிக்கும் ஒரு அமைப்பாக இருந்து வருகிறது. தங்களுடைய நலன்களுக்கு எந்தக் கட்சி சிறப்பாக செயல்படுமெனவும், அடுத்த ஐந்தாண்டுகளுக்கு மக்களை மிகவும் திறமையாக ஏமாற்றவும் கூடிய ஒரு குறிப்பிட்ட கட்சியை அவர்கள் தேர்ந்தெடுக்கிறார்கள்.

தங்களுக்குப் பிடித்த கட்சியை அவர்கள் முடிவு செய்த பின்னர், ஏகபோக முதலாளிகள் தங்களுடைய செல்வத்தையும், பல்வேறு வழிகளையும் பயன்படுத்தி தாங்கள் விரும்பும் முடிவுகளை உறுதி செய்து கொள்கின்றனர். ஒரு குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட அரசியல் கட்சிகளை பலவீனப்படுத்துவதற்காக, ஊழல் குற்றச்சாட்டுக்கள் அவர்களுக்கு எதிராக வைக்கப்படுகின்றன. பெருமுதலாளி வகுப்பினருக்குப் பிடித்தமான கட்சியின் வெற்றிக்கு வழி வகுப்பதற்காக, சில குறிப்பிட்ட கட்சிகளில் பிளவுகளைத் திட்டமிட்ட முறையில் உருவாக்குகிறார்கள்.

150 முதலாளித்துவ ஏகபோகக் குடும்பங்களைத் தலைமையாகக் கொண்டுள்ள ஒரு சிறுபான்மையான முதலாளித்துவ சுரண்டல் வகுப்பினர் தாம், நமது நாட்டில் நடைபெறும் தேர்தல்களுக்கான திட்டத்தையும், தேர்தல் முடிவுகளையும் தீர்மானிக்கிறார்கள்.

வகுப்புவாத, சாதி அடிப்படையில் அணிதிரட்டுதல், பண பலம், ஊடகங்கள் மீது கட்டுப்பாடு போன்ற பல்வேறு பிளவுவாதத் தந்திரங்களோடு, மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களும் தேர்தல் முடிவுகளை சூழ்ச்சியாகக் கையாள்வதும், அதற்குப் பிடித்த கட்சிக்கு, "அதிரடிப் பெரும்பான்மையை" உற்பத்தி செய்வதற்கும் பெரு முதலாளி வகுப்பிற்கு எளிதான வழியைக் கொடுக்கின்றன.

எல்லா எதிர்ப்பும் நாட்டிற்கு எதிரானதென அறிவித்து, அதைப் பாசிச முறையில் ஒடுக்குவதன் மூலமும், இராணுவ மயமாக்கல் மற்றும் ஏகாதிபத்தியங்களுக்கு இடைப்பட்ட போரில் பங்கேற்பதன் மூலமும் தங்களுடைய தொழிலாளர் விரோத, உழவர் விரோத, சமூக விரோத, தேச விரோதத் திட்டமாகிய இந்திய மூலதனத்தை உலகமயமாக்கும் திட்டத்தை முன் கொண்டு செல்வதற்கு அனைத்திந்திய மட்டத்தில் பாஜக-வை வலுப்படுத்த வேண்டுமென மிகவும் கொழுத்த, செல்வாக்கு பெற்ற முதலாளிகள் விரும்புகின்றனர் என்பதை மார்ச் 11 தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன.

பெரு முதலாளி வகுப்பின் தலைவர்கள், இந்தத் தேர்தல் முடிவுகளை வெளிப்படையாகவே கொண்டாடியும், மோடியை இந்தியாவின் புதிய "அரசனென" புகழாரம் சூட்டியும் வருகிறார்கள். இந்தியா அரசியல் சுதந்திரம் பெற்று 75 ஆண்டு நிறைவடையும் ஆண்டாகிய 2022-க்குள், ஒரு "புதிய இந்தியா"வை நிலைநாட்டுவதற்கான பாதைத் திறந்து விடப்பட்டிருப்பதாக பிரதமர் மோடி கூறிக் கொள்கிறார்.

புதிய இந்தியா என்ற பெயர்ப் பலகையின் கீழ், உலகின் முன்னணி ஏகாதிபத்திய சக்திகளுடைய குழுவில் சேர்ந்து கொள்ள வேண்டுமென்ற தன்னுடைய திட்டத்தை முன் கொண்டு செல்வதில் பெரு முதலாளி வகுப்பு குறியாக இருக்கின்றனர். அது, உழைக்கும் பெரும்பான்மையான இந்தியர்களுடைய உரிமைகளுக்கும், நல்வாழ்விற்கும் எதிரானதாக இருக்கும். இது, நமது நாட்டினுடைய மலிவான, அதே நேரத்தில் மிகுந்த உற்பத்தித் திறனுடைய இளம் தொழிலாளர்களைக் கடுமையாகச் சுரண்டுவதன் மூலம் மிகச் சிலருடைய கைகளில் முதலாளித்துவச் செல்வத்தை விரைவாகக் குவிக்கும் திட்டமாகும். அது மேலும் தீவிரமாகவும், விரிவாகவும், உழவர்களைக் கொள்ளையடிக்கவும், இயற்கை வளங்களைச் சூறையாடவும், இராணுவமயப்படுத்தவும், அரசு கருவூலத்தைக் கொள்ளையடிக்கவும் ஆன திட்டமாகும்.

முதலாளி வகுப்பு மிகவும் அபாயகரமான போக்கில் வேகமாகச் சென்று கொண்டிருக்கிறார்கள்.

முதலாளி வகுப்பினருடைய தொழிலாளர் விரோத, உழவர் விரோதத் திட்டத்தைத் தீவிரப்படுத்த மோடி அரசாங்கத்திற்கு மக்கள் "கட்டளையிட்டிருப்பதாக" கூறிக் கொள்வது, முழு மோசடியாகும். இந்த பூதாகரமான பொய்யை நாம் கேள்வி கேட்க வேண்டும். தொழிலாளி வகுப்பினருடைய போராட்ட ஒற்றுமையைப் பாதுகாப்பதும், அதை மேலும் வலுப்படுத்துவதும், பெரு முதலாளி வகுப்பினருடைய தாக்குதலுக்கு எதிராக போராட்டத்தைத் தீவிரப்படுத்துவதும் அவசியமாகும்.

வகுப்புவாதம், வகுப்புச் சுரண்டல், சாதி ஒடுக்குமுறை உட்பட நம்முடைய பிரச்சனைகளுக்குத் தீர்வானது பெரு முதலாளிகளுடைய ஆட்சியதிகாரத்தை முடிவுக்குக் கொண்டு வருவதிலும், அதற்கு பதிலாக தொழிலாளர்கள், உழவர்களுடைய ஆட்சியை நிறுவுவதிலும் இருக்கிறது. தேவைப்படுவது என்னவென்றால், முழு அரசியல் அமைப்பையும், பொருளாதாரத்தின் போக்கையும் மாற்றியமைப்பதாகும்.

முதலாளி வகுப்பினருடைய தொழிலாளர் விரோத, உழவர் விரோதத் திட்டத்தைத் தீவிரப்படுத்த மோடி அரசாங்கத்திற்கு மக்கள் "கட்டளையிட்டிருப்பதாக" கூறிக் கொள்வது, முழு மோசடியாகும்.

தொழிலாளர்கள், உழவர்கள் நாம், அரசியல் அதிகாரத்தை நம் கைகளில் எடுத்துக் கொள்வதன் மூலம், சுரண்டலுக்கு ஒரு முடிவு கட்டவும், அனைவரும் மனித மாண்புடன் வாழ்க்கை நடத்துவதற்கான தேவைகளை நிறைவேற்றவும், பொருளாதாரத்தைத் திருத்தியமைக்க முடியும்.

நம்முடைய எல்லா உரிமைகளுக்கும் உத்திரவாதம் அளிக்கக் கூடிய ஒரு புதிய அரசை நிர்மாணிக்கும் கண்ணோட்டத்தோடு முதலாளி வகுப்பின் திட்டத்திற்கு எதிராக நம்முடைய போராட்டத்தைத் தீவிரப்படுத்துவோம். நம்முடைய போராட்ட ஒற்றுமையைக் கட்டி வலுப்படுத்தி, ஆளும் வகுப்பினருடைய பிளவுவாத சதித் திட்டங்களை முறியடிப்போம். ■

# வங்கி நெருக்கடிக்குத் தீர்வு சமூகமயப்படுத்துவதாகும், தனியார்மயமல்ல

இந்திய வங்கிகளின் நெருக்கடி பல்லாண்டுகளாகவே அதிகரித்து வந்திருக்கிறது. வணிக வங்கிகள் கொடுத்த கடன்களில் அதிகரித்து வரும் ஒரு பெரும் எண்ணிக்கையிலான கடன்கள் வாராக் கடன்களாகவும், மோசமான கடன்களாகவும் மாறி வருகின்றன. 90 நாட்களுக்கு மேல் எந்த ஒரு கடனின் அசல் அல்லது வட்டி செலுத்தப்படாமல் இருந்தால் அதை வாராக் கடன் (NPA) என்று அழைக்கப்படுகிறது. கடன் வாங்கியவர் முன்பு ஒப்புக் கொண்டபடி கடனைத் திருப்பியடைக்காத கடன் என்று அதற்குப் பொருள்.

பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ள தனியார் மற்றும் அரசாங்கத்திற்குச் சொந்தமான வங்கிகளின் மொத்த வாராக் கடன் தொகையானது, 2015 மார்ச் 31-இல் ரூ 3,00,000 கோடியாக இருந்தது, 2016 மார்ச் 31 இல் அது ரூ 5,80,000 கோடியாக உயர்ந்திருக்கிறது. 2016 டிசம்பர் 31 இல் அது மேலும் அதிகரித்து ரூ 6,15,000 கோடியாக ஆகியிருக்கிறது. மொத்தக் கடனில் வாராக் கடனுடைய விகிதம் ஏற்கெனவே 11 சதவிகிதத்திற்கும் மேல் இருப்பதோடு, அது தொடர்ந்து அதிகரித்தும் வருகிறது. அண்மையில் இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்ட நிதி நிலைத்தன்மை அறிக்கையின் படி, "2016 செப்டெம்பரில் 11.8 சதவிகிதமாக இருந்த மொத்த வாராக் கடன் விகிதம், 2017 மார்ச்சில் 12.5 சதவிகிதமாகவும், 2018 மார்ச்சில் 12.9 சதவிகிதமாகவும் உயரலாம்" என்று கூறுகிறது.

முதலாளித்துவ நிறுவனங்களுக்குக் கடனாக கொடுக்கப்பட்டுள்ள பணம், வங்கிகளில் தங்களுடைய சேமிப்புக்களைச் சேர்த்து வைத்துள்ள மக்களுக்குச் சொந்தமானதாகும். முதலாளிகள் வாங்கிய கடன்களை அடைக்கத் தவறும் போது, அது வங்கிகளில் சேமித்து வைத்தவர்களுக்கு ஒரு அபாயமாக இருக்கிறது. வங்கி திவாலானால் அதாவது, வங்கியில் பணத்தைக் கட்டி வைத்த அனைவருக்கும் திருப்பிக் கொடுக்க போதுமான பணம் வங்கியிடம் இல்லையானால், உழைக்கும் மக்கள் பாடுபட்டு சம்பாதித்த எல்லா சேமிப்பையும் அல்லது அதில் ஒரு பங்கையும் இழக்கக் கூடிய அபாயத்தைச் சந்திக்கிறார்கள்.

வாராக் கடன்கள் அதிகரித்து வருவது குறித்து பல ஆண்டுகளாகவே வங்கி ஊழியர் சங்கங்கள் கவலை தெரிவித்து வந்துள்ளன. ஆனால் அதை வேண்டுமென்றே மத்திய அரசாங்கமும், வங்கியின் மேலாளர்களும் மூடி மறைத்து வந்துள்ளனர். பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ள எல்லா வணிக வங்கிகளும் வாராக் கடன்கள் குறித்த கணக்கீடுகளிலும், அதற்காக ஏற்பாடு செய்வதிலும் சர்வதேச வரைமுறைகளைப் பின்பற்ற வேண்டுமென ஆர்.பி.ஐ-யின் தேவையின் விளைவாக 2015-இல் உண்மை வெட்ட வெளிச்சமாகத் தொடங்கியது.

பெரும்பாலான வங்கிகளை நெருக்கடியில் ஆழ்த்திய கடன்களைத் திருப்பியடைக்காத பெரும் முதலாளிகளின் நலன்களை இந்திய அரசாங்கமும், இந்திய ரிசர்வ் வங்கியும் சேர்ந்து பாதுகாத்து வருகிறார்கள் என்பது மென்மேலும் வெட்ட வெளிச்சமாகி வருகிறது. கடனைத் திருப்பிக் கட்டாத முதலாளிகள் உருவாக்கிய நெருக்கடியின் சுமையை உழைக்கும் மக்களைச் சுமக்கச் செய்கிறார்கள். பண மதிப்பு நீக்கத்தின் மூலம், உழைக்கும் மக்கள் தங்களுடைய எல்லா சேமிப்புக்களையும் வங்கிகளில் கட்டி வைக்குமாறு அவர்களைக் கட்டாயப்படுத்தியிருப்பதோடு, அப்படிப்பட்ட வைப்புகளுக்கு வட்டி விகிதத்தையும் குறைத்துக் கொண்டே வருகிறார்கள்.

### ஏகபோக முதலாளித்துவ மேலாதிக்கம்

நூற்றுக் கணக்கான கோடி ரூபாய்கள் மதிப்புள்ள கடன்களை அங்கீகரிப்பது உட்பட, எல்லா முக்கிய பொருளாதார முடிவுகளிலும் முதலாளித்துவ ஏகபோகங்கள் ஆதிக்கம் செலுத்துகிறார்கள். இதுவே வங்கி நெருக்கடிக்கான முக்கிய காரணமாகும்.

மிகப் பெரிய முதலாளித்துவ நிறுவனங்கள், மிகப் பெரிய தொகைகளை கடன்களாக வங்கிகளிலிருந்து பெறுகிறார்கள். 2015 மார்ச் 31 வரை, பொதுத் துறை வங்கிகளிடமிருந்து ஏகபோக குடும்பங்களில் மிகப் பெரிய அளவில் கடன் வாங்கியவர்கள் நிலுவையில் வைத்துள்ள கடன் தொகையானது 7,32,780 கோடி ரூபாய்களாகும். இந்தப் பட்டியலின் முன்னணியில் ரிலையன்ஸ், வேதாந்தா, எஸ்ஸார், அடானி மற்றும் ஜேபி நிறுவனங்கள் ஆகியன உள்ளன. ஏகபோகக் குடும்பங்கள், எந்த வகையான முதலீடுகளுக்கும் அல்லது யூக அடிப்படையிலான திட்டங்களுக்கும் தேவைப்படும் தொகையை இப்படிப்பட்ட கடன்களாக அங்கீகாரம் பெறுகிறார்கள். அதிகபட்ச இலாபம் கிடைக்கும் வரை வங்கிக் கடன்களைக் கட்டி வருகிறார்கள். எதிர்பார்த்த இலாபம் கிடைக்கவில்லையென்றால், வங்கிகளிடமிருந்து வாங்கிய கடனை அடைப்பதை நிறுத்தி விடுகிறார்கள்.

ஒரு உழவரோ, சிறு தொழில் செய்பவரோ ஒரு வங்கியிலிருந்து கடன் வாங்கிவிட்டு, திருப்பிக் கட்ட வேண்டிய தொகையை ஒரு மாதத்திற்குக் கட்டத் தவறிவிட்டால், பாதுகாப்பிற்காக கொடுக்கப்பட்டுள்ள சொத்துக்களைக் கைப்பற்றுவதன் மூலம், அந்த வங்கி கடன் தொகையை அவரிடமிருந்து மீண்டும் கைப்பற்றுகிறது. ஆனால் பெரு முதலாளிகள் கடனை அடைக்கத் தவறும் போது, வங்கிகள் இதே போல நடவடிக்கை எடுப்பதில்லை. அதிகாரத்தில் உள்ள யாரையாவது பெரு முதலாளிகள் கூப்பிட்டு, அந்தச் சுமையை பொது மக்களுடைய முதுகில் ஏற்றுவதற்கு ஒரு வழியைக் கண்டுபிடிப்பதற்காக உயர் மட்டக் கூட்டங்களை நடத்துகின்றனர்.

வங்கி மேலாளர்களுடைய நடவடிக்கைகளை பல்வேறு வழிகளில் முதலாளித்துவ ஏகபோக குடும்பங்கள் கட்டுப்படுத்துகின்றன. ரிசர்வ் வங்கியின் தலைமைக் குழுவில் டாடா குழுமத்தின் தலைவர், மகேந்திரா இன்டர்டிரேட்சினுடைய தலைவர் மற்றும் பில் அன்டு மெலின்டா கேட்ஸ் நிறுவனத்தினுடைய இந்தியத் தலைவர் ஆகியோர் அமர்ந்திருக்கிறார்கள்.

சிறு தொழில் நடத்துபவர்களுக்கும், உழவர்களுக்கும் கொடுக்கப்படும் கடன்களுக்கு வாங்கும் வட்டி விகிதத்தைக் காட்டிலும் குறைவான வட்டியில் பெரும் முதலாளித்துவ நிறுவனங்களுக்கு வங்கிகள் கடன் கொடுக்கிறார்கள். எந்த அளவிற்கு முதலாளி பெரியவனாக இருக்கிறானோ அந்த அளவிற்கு வட்டி விகிதம் குறைவானதாகவும், திருப்பிச் செலுத்தும் நிபந்தனைகள் எளிதானதாகவும் இருக்கின்றன. மற்ற கடன்களைக் காட்டிலும் பெரும் முதலாளிகளுக்கு கடன் கொடுப்பதில் "குறைவான அபாயங்களே" இருப்பதாகக் கூறி, இந்த பாரபட்சமான போக்கை வங்கிகள் நியாயப்படுத்துகின்றனர். குறைவான அபாயமுள்ளதாகக் கூறப்படும் இந்தக் கடன்கள், வாராக் கடன்களாக மாறும்போது, அண்மைக் காலத்தில் ஏற்பட்ட முதலாளித்துவத்தின் உலகளாவிய நெருக்கடி போல, அது ஒரு நெருக்கடியை உருவாக்குகிறது.

இவ்வாறு பிரச்சனையின் ஆணி வேரானது வங்கிகள் மீது ஏகபோக முதலாளித்துவ மேலாதிக்கத்தில் இருக்கிறது. பொது மக்களுடைய சேமிப்புக்களை தங்களுடைய கைகளில் குவித்து வைத்துள்ள வங்கிகள், அந்தப் பணத்தை உற்பத்திகரமான நிறுவனங்களுடைய முதலீடுகளுக்கும், தினசரி முதலீட்டுத் தேவைகளுக்கும் கடனாக அளிக்கின்றன. இந்த வங்கிகள் முதலாளித்துவ ஏகபோகக் குடும்பங்களுடைய கட்டுப்பாட்டிலும், அவர்களுடைய நலன்களுக்காகவும் செயல்பட்டு வருகின்றன.

### முதலாளித்துவ வகுப்பின் சீர்திருத்தத் திட்டம்

கடந்த சில ஆண்டுகளாக, முதலாளித்துவ ஏகபோகங்கள், இந்திய வங்கிகளுக்கு ஒரு சீர்திருத்தத் திட்டத்தை முன்வைத்து அதை நடைமுறைப்படுத்தி வருகிறார்கள். அதில் முக்கியமாக ஒருங்கிணைப்பதும், மின்னணு முறையைப் பயன்படுத்துவதும், தனியார்மயப்படுத்துவதும் அடங்கும்.

ஒருங்கிணைப்பது என்றால், வங்கிகளை ஒன்று சேர்ப்பது அல்லது ஒரு வங்கி இன்னொரு வங்கியை விலைக்கு வாங்குவதன் மூலம் வங்கிகளின் எண்ணிக்கையைக் குறைப்பது என்று பொருள். அதன் மூலம், வங்கிகளில் வேலை செய்பவர்களின் எண்ணிக்கையை வெட்டிக் குறைக்க இருக்கிறார்கள். கடந்த மாதம் பாரத ஸ்டேட் வங்கியின் ஐந்து துணை வங்கிகளை அதனுடன் ஒருங்கிணைப்பதை மத்திய அமைச்சரவை அங்கீகரித்திருக்கிறது.

மின்னணுமயமாக்கும் சீர்திருத்தம், வங்கிகளின் இலாபத்தை அதிகரிக்கும் நோக்கம் கொண்டதாகும். மிகப் பெரிய ஏகபோக குடும்பங்களின் கட்டுப்பாட்டில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள பண பரிவர்த்தனை வங்கிகள், ஒவ்வொரு மின்னணு பரிவர்த்தனைக்கும் கட்டணத்தை வசூலிப்பதன் மூலம் அதிகபட்ச இலாபத்தைக் குவித்து வருகிறார்கள்.

பொதுத் துறை வங்கிகளின் ஒரு கணிசமான பகுதியைத் தனியார் மயப்படுத்துவதற்கான திட்டம் பல ஆண்டுகளாகவே தயாரிக்கப்பட்டு வருகிறது. அந்தத் திட்டமானது அரசாங்கம் தன்னுடைய பங்குகளை விற்பதன் மூலம் வங்கிகளில் அரசாங்கத்தின் உடமையை 50 சதவிகிதத்திற்கும் கீழே கொண்டு வருவதாகும். அதனுடைய நோக்கமானது, முதலாளித்துவ ஏகபோகக் குடும்பங்கள் நேரடியாக வங்கிகளைத் தங்களுடைய உடமையாக வைத்திருக்கவும், கட்டுப்படுத்தவும் பாதையைத் திறந்து விடுவதாகும். வங்கிகளைத் தனியார்மயப்படுத்தும் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த சரியான நேரத்திற்காக மோடி அரசாங்கம் காத்துக் கொண்டிருக்கிறது.

"அரசியல் தலையீட்டை" ஒழிப்பது, வங்கித் துறையின் செயல் திறனையும், நலத்தையும் அதிகரிக்குமென தனியார்மயத்தின் ஆதரவாளர்கள் கூறிக் கொள்கிறார்கள். அரசின் வரைமுறைகளை ஒட்டுமொத்தமாக நீக்கி விடுவது ஒரு தீர்வல்ல என்பதை, 2008-இல் அமெரிக்கப் பொருளாதாரத்தைத் தாக்கிய நிதி நெருக்கடியும், அது உலகெங்கிலும் பரவியதும் காட்டுகின்றன. அந்த நெருக்கடியை உருவாக்கியதில் பூதாகரமான வங்கிகளுடைய கட்டுப்பாடற்ற ஊகச் செயல்பாடுகள் ஒரு முக்கிய காரணியாகும்.

உண்மை என்னவென்றால், முதலாளித்துவ வகுப்பே தன்னுடைய பேராசையை முறைப்படுத்திக் கொள்ள முடியாது. பொருளாதாரத்தில் தனிப்பட்ட இலாபத்தை அதிகரிப்பதற்கான இடைவெளியை முதலில் கட்டுப்படுத்துவதில் தொடங்கி, இறுதியில் அறவே அகற்றுவதற்கு தொழிலாளி வகுப்புதான் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### தொழிலாளி வகுப்பின் புரட்சிகரத் திட்டம்

இந்த நேரத்தில் 10,00,000-த்திற்கும் மேற்பட்ட பொதுத் துறை வங்கித் தொழிலாளர்களுடைய உடனடிக் கோரிக்கைகளில் ஒன்று, கடனைத்

*தொடர்ச்சி பக்கம் 7 ...*

# தனியார்மயத் திட்டத்தைத் தீவிரப்படுத்த நடவடிக்கைகள்

வருகின்ற ஏப்ரல் 17 - மார்ச் 18 நிதியாண்டில், நிலக்கரியை வியாபார அடிப்படையில் வெட்டி எடுக்க கதவுகளைத் திறந்துவிட திட்டமிட்டிருப்பதாக மோடி அரசாங்கம் அறிவித்திருக்கிறது. இந்த ஆண்டு 23 சுரங்கங்களை ஏலத்தில் விடும் திட்டமிருக்கிறது. வணிக ரீதியாக சுரங்கங்களை வாங்குபவர்கள், நிலக்கரியை யாருக்கு வேண்டுமானாலும் விற்கலாம். இதற்காக நிலக்கரிச் சுரங்கங்கள் சிறப்பு சட்டம், 2015 கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதன் மூலம் நிலக்கரிச் சுரங்கங்களை வணிக ரீதியில் தனிப்பட்டவர்களுக்கு அரசாங்கம் விற்க அனுமதிக்கப்படுகிறது.

வணிக ரீதியில் நிலக்கரி சுரங்கத்தைக் கொண்டு வருவதற்கு கூறப்படுகின்ற காரணம், "நிலக்கரி சுரங்கத்தை வணிக ரீதியாக நடத்துவதற்கு கதவைத் திறந்து விடுவதன் மூலம், அரசு நடத்தும் கோல் இந்தியா லிமி (சிஐஎல்) நிறுவனத்திற்குப் போட்டியை அரசாங்கம் உருவாக்குகிறது" என்பதாகும். சிஐஎல்-னுடைய தொழிலாளர்களுடைய "உற்பத்தித் திறன் மிகக் குறைவாக" இருப்பதாக அரசாங்கம் கூறி வருகிறது. சிஐஎல்-ஐ போட்டி போடக்கூடியதாக மாற்றுவது என்ற பெயரில், வணிக நிலக்கரிச் சுரங்கங்களைப் பயன்படுத்தி சிஐஎல்-னுடைய தொழிலாளர்களைக் குறைக்கப் பயன்படுத்தப்படும்.


தனியார்மயத்தைத் தீவிரப்படுத்தி வரும் மோடி அரசாங்கம், கடந்த மூன்றாண்டுகளாக இலாபம் ஈட்டிவரும் பொதுத் துறை நிறுவனங்களை பங்குச் சந்தைக்குக் கொண்டுவர வேண்டுமென்று கூறி வருகிறது. பங்குச் சந்தையில் வெளியிட வேண்டுமானால், இந்த நிறுவனங்களுடைய பங்குகளில் குறைந்தபட்சமாக 25 சதவிகிதத்தை அரசாங்கம் விற்க வேண்டும், அல்லது புதிய பங்குகளை வெளியிடுவதன் மூலம் தன்னுடைய உடைமையை அதிகபட்சமாக 75 சதவிகிதமாகக் குறைக்க வேண்டும். முதல் கட்ட பொதுத் துறை நிறுவனங்களின் பங்குகள், இந்த ஆண்டு தீபாவளியை ஒட்டி விற்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது எல்லா இலாபம் ஈட்டும் பொதுத் துறை நிறுவனங்களை ஓரளவு தனியார்மயப்படுத்தும் முயற்சியின் துவக்கமாகும்.

ஓரளவு தனியார்மயப்படுத்துவதற்கு நிறுவனங்களைக் கண்டறிய வேண்டுமென எல்லா அரசாங்கத் துறைகளையும் முதலீடு மற்றும் பொது சொத்து மேலாண்மைத் துறை (Dipam) அறிவுரை வழங்கியிருக்கிறது. பிப்ரவரி 1 அன்று மத்திய வரவு செலவு திட்டத்தில் அறிவிக்கப்பட்டதன் படி, இந்திய இரயில்வேயின் மூன்று பொதுத் துறை நிறுவனங்களாகிய ஐஆர்சிடிசி, ஐஆர்எப்சி மற்றும் ஐஆர்கான் ஆகியவற்றை எப்படிப் பங்குச் சந்தைக்குக் கொண்டுவருவது என்பது பற்றி வழிகாட்ட ஒரு அறிவுரையாளரை இந்திய இரயில்வே நியமித்திருக்கிறது.

வரும் நிதியாண்டில், ரூ 72,500 கோடி பொதுத் துறை முதலீடுகளை விற்க வேண்டுமென மத்திய வரவு-செலவு திட்டம் இலக்கை நிர்ணயித்திருக்கிறது. இதில் ஐந்து பொது காப்பீட்டு நிறுவனங்களை விற்பதும், சில நிறுவனங்களின் முக்கிய விற்பனையும் அடங்கும். முக்கிய விற்பனை என்றால், நிறுவனத்தை வாங்குபவர்களிடம் முழு பொறுப்பையும் விட்டுவிடுதல் அதாவது முழுவதுமாக தனியார்மயப்படுத்துதல் என்று பொருளாகும்.

இவை மட்டுமின்றி, அரசின் எண்ணெய் நிறுவனங்களையும், பாரத ஸ்டேட் வங்கிகளின் துணை நிறுவனங்களையும் ஒன்றிணைக்க நடவடிக்கைகளை அரசாங்கம் முடுக்கிவிட்டிருக்கிறது. ■


**தொழிலாளர் ஒற்றுமைக் குரல்**



படியுங்கள், பரப்புங்கள்!

ஆண்டுச் சந்தா ரூ 50 மட்டும்

முகவரி: இ.சரவணமுத்துவேல்,
358, வள்ளுவர் நகர்
1-ஆம் தெரு (கிழக்கு)
கோவில்பட்டி, 628501
கைபேசி - 94866 07248

Workers.Paper@gmail.com


# நாட்டுப் பற்று என்ற பெயரில் அரசியல் கேள்விகளைப் பற்றிய விவாதங்களுக்குத் தடை

ஜோத்பூரில் உள்ள ஜெய் நாராயன் வியாஸ் பல்கலைக் கழகத்தின் வரலாற்றுத் துறை, "இலக்கியங்கள் மூலம் வரலாற்றை மீண்டும் கட்டுதல் - தேசம், அடையாளம், பண்பாடு" என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கை பிப்ரவரி 2, 2017 இல் ஏற்பாடு செய்திருந்தது. அதற்கு மறு நாள், அந்தக் கருத்தரங்கில் உரையாற்றிய ஒரு பேராசிரியர் "தேச விரோத கருத்துக்களை" வெளியிட்டதாகக் கூறி ஆளும் பாஜக-வின் மாணவர் பிரிவான அகில் பாரதிய வித்யார்த்தி பாரிசத் (ஏபிவிபி) பல்கலைக் கழகத்தை மூடி ஆர்பாட்டம் நடத்தினர். இந்தக் கருத்தரங்கை ஏற்பாடு செய்து நடத்திய ஆசிரியரை பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர், பணியிடை நீக்கம் செய்திருக்கிறார்.

தில்லி பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ராம்ஜாஸ் கல்லூரியின் ஆங்கிலத் துறை, "எதிர்ப்புகளின் பண்பாடுகள்" என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கை பிப்ரவரி 21, 2017 அன்று நடத்தினர். இந்தக் கூட்டத்தில் ஏபிவிபி-யைச் சேர்ந்த மாணவர்கள் இடையூறு விளைவித்தனர். அவர்கள், ஜேஎன்யூ பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த இரு மாணவர்கள் பேச்சாளர்களாகப் பங்கேற்பதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். ஓராண்டிற்கு முன்னர் திருத்தம் செய்யப்பட்ட விடியோ பதிவுகளின் அடிப்படையில் இந்த இரு மாணவர்களும் "தேச விரோதிகளாக" முத்திரை குத்தப்பட்டுள்ளனர். அந்தக் கல்லூரியின் முதல்வர், அந்தக் கருத்தரங்கை நிறுத்துமாறு கட்டாயப்படுத்தப்பட்டார். அடுத்த நாள் காவல் நிலையத்தில் ஒரு புகாரைப் பதிவு செய்வதற்காக கல்லூரி மாணவர்களும், ஆசிரியர்களும் ஒரு அணியாகத் திரண்டு சென்ற போது, ஏபிவிபி-ஐச் சேர்ந்த ஒரு கும்பல், எதிர்ப்பாளர்களை வன்மையாகத் தாக்கி அவர்களைக் கலைக்க காவல் துறை அனுமதித்திருக்கிறது.

பல்வேறு மாநிலங்களிலும் பல்கலைக் கழகங்களில் இப்படிப்பட்ட தாக்குதல்கள் நடைபெற்றிருக்கின்றன. இவற்றை நியாயப்படுத்தி பல்வேறு அமைச்சர்கள் கூறிவருவன, இந்தத் தாக்குதல்களுக்கு அதிகாரத்தில் உள்ளவர்களுடைய முழு ஆதரவு இருக்கிறது என்பதைக் காட்டுகின்றன. பிப்ரவரி 25 அன்று இலண்டன் ஸ்கூல் ஆப் எக்னாமிக்ஸ் அன்ட் பொலிட்டிகல் சயன்சஸில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் உரையாற்றிய நிதியமைச்சர் ஜெட்லி, "இந்தியாவில் தேசங்களைப் பற்றியும், தேசிய இனங்களின் உரிமைகளைப் பற்றியும் பேசும் எவரும் 'இந்தியாவின் இறையாண்மைக்கும், ஒருமைப்பாட்டிற்கும்' எதிரானவர்கள் ஆவர். எனவே, அவர்கள் 'சதித் திட்டத்தின் கூட்டணியை'ச் சேர்ந்தவர்களும், 'தேச விரோதிகளும்' ஆவர். எனவே, இந்திய அரசியல் சட்டத்தின் படி, அவர்களுடைய சுதந்திரத்தை வெட்டிக் குறைக்க முடியும்" என்று கூறியிருக்கிறார்.

நமது நாட்டு மக்களுடைய இயற்கை வளங்களும், நிலமும் தங்களுடைய தனிப்பட்ட சொத்து எனவும், அவர்கள் அவற்றை ஈவு இரக்கமின்றி சூறையாடுவதற்கானவை என்றும் கருதும் ஆளும் பெரு முதலாளி வகுப்பினருடைய எண்ணத்தைத் தான் ஜெட்லி வெளிப்படுத்தியுள்ளார். இந்த சூறையாடலையும், கொள்ளையையும் கேள்வி கேட்டு, தங்களுடைய உரிமைகளைக் கோரும் தொழிலாளர்கள், உழவர்கள், பெண்கள், இளைஞர்கள், பழங்குடி மக்கள், ஒடுக்கப்பட்ட தேசிய இன மக்கள் என அனைவரும் "சதித்திட்டக் கூட்டணியை"ச் சேர்ந்தவர்களும், "தேச விரோதி"களும் ஆவர்.

"நாட்டுப் பற்று" என்ற பெயரில், பாஜக அரசாங்கம், கல்லூரி வளாகங்களில் அரசியல் கேள்விகளைப் பற்றி விவாதங்கள் நடத்துவதைத் தடை செய்து அதை நியாயப்படுத்தி வருகிறது. ஆசிரியர்கள், அவர்களுடைய கருத்துக்களுக்காக துன்புறுத்தப்படுகிறார்கள் மாணவர்கள் தாக்கப்படுகிறார்கள். மக்களிடையே வேண்டுமென்றே வெறியைத் தூண்டிவிட்டு, இந்தியாவும், இந்திய மக்களும் சந்தித்து வரும் பிரச்சனைகளின் தீர்வு குறித்து மாறுபட்ட கருத்துக்களை கொண்டிருக்கும் அனைவரையும் தேச விரோதிகளாக நடத்தப்பட்டு வருகிறார்கள்.

உண்மை என்னவென்றால், இந்தியாவில் எண்ணெற்ற தேசங்களும் தேசிய இனங்களும் இருக்கின்றன. ஆனால் இந்திய அரசியல் சட்டம் தேசங்களும், தேசிய இனங்களும் இருப்பதை அங்கீகரிக்கக் கூட இல்லை, அவர்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பது பற்றி பேச்சுக்கே இடமில்லை. கருத்துரிமை உட்பட நமது மக்களுடைய மனித உரிமைகளை அரசியல் சட்டம் பாதுகாப்பதில்லை.

அரசியல் பிரச்சனைகளை, ஒடுக்குமுறையின் மூலம் தீர்க்கப்பட வேண்டிய "சட்ட ஒழுங்குப் பிரச்சனை"யாக மாற்றுவதன் மூலம், நமது நாட்டில் எழுந்து வரும் மோதல்களுக்குத் தீர்வு காண முடியாது. மாறாக, மாறி மாறி வந்த அரசாங்கங்கள் இப்படிப்பட்ட ஒரு போக்கைப் பின்பற்றிய காரணத்தாலே தான், இந்திய மக்களுடைய ஒற்றுமையும், ஐக்கியமும் அச்சுறுத்தலுக்கு ஆளாகியிருக்கிறது. ஆளும் வகுப்பினர்தான் குற்றவியலான தேச விரோத செயல்களில் ஈடுபட்டு வருகிறார்கள், மக்களுடைய மனித, சனநாயக, தேசிய உரிமைகளை உயர்த்திப் பிடிப்பவர்கள் அல்ல. ■

## 2017 சர்வதேச மகளிர் தினம்: ...

முதல் பக்க தொடர்ச்சி

வெட்ட வெளிச்சமாக்கியிருக்கிறது. காவல் துறையும், பிற அதிகாரபூர்வமான ஆயுதப்படைகளும் பெண்களுக்குப் பாதுகாப்பை உறுதி செய்வதில்லை. மாறாக பெண்களைச் சிறையில் அடைத்து கற்பழிப்பு செய்வது உட்பட மிகக் கொடூரமான குற்றங்களை அவர்கள் நடத்தி வருகிறார்கள். நீதி மன்றங்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை உறுதி செய்வதில்லை. பெண்களுக்கு எதிரான குற்றங்களை இழைக்கும் குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கு பதிலாக அந்தக் குற்றவாளிகளை இந்தியக் குடியரசின் நிறுவனங்கள் பாதுகாக்கின்றன.

இன்றைய அரசில் அதிகாரத்திற்காகப் போட்டி போடும் கட்சிகள், எல்லா சமூகக் கேடுகளுக்கும் முடிவு கட்டுவோமென வாக்குறுதியளிக்கிறார்கள். ஆனால் அதிகாரத்திற்கு வந்தவுடன், அவர்கள பெரு முதலாளி வகுப்பினருடைய நலன்களுக்காகத் திட்டவட்டமாக சேவை செய்கிறார்கள். அவர்கள் ஏகபோகக் குடும்பங்களைக் கொழுக்கச் செய்வதற்காக, பெண்களுக்கும் மக்களுக்கும் எதிரான அதே முதலாளித்துவ சீர்திருத்தத் திட்டங்களைச் செயல்படுத்துகிறார்கள்.

"உலகில் மிகவும் அதிகமான மக்கள் தொகை கொண்ட இந்த சனநாயகத்தில்", அரசியல் அதிகாரம் மிகச் சிறுபான்மையானவர்களுடைய கைகளில் குவிக்கப்பட்டு இருக்கிறது. அவர்கள் பெரும்பான்மையான பெண்கள் மற்றும் ஆடவர்களை விலையாகக் கொடுத்து, தங்களுடைய சுயநலத்தை நிறைவேற்றி வருகின்றனர். பொருளாதார அமைப்பு, உற்பத்திக் கருவிகள் தனியார் உடமையாக இருப்பதை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அது, மனித உழைப்பை அதிகபட்சமாகச் சுரண்டுவதன் மூலமும், சிறு உற்பத்தியாளர்களைத் திருடுவதன் மூலமும், இயற்கை வளங்களைச் சூறையாடுவதன் மூலமும் முதலாளித்துவ இலாபத்தை அதிகரிப்பதற்காகச் செயல்படுகிறது. பெண்கள் கீழ்த்தரமாக நடத்தப்படுவதையும், அவர்கள் கடுமையாகச் சுரண்டப்படுவதையும் பொருளாதார மற்றும் அரசியல் அமைப்பு பாதுகாத்து நீடிக்கச் செய்கிறது.

தொழிலாளி வகுப்பின் போராட்டங்களுக்கும், பெண்களுடைய போராட்டங்களுக்கும் இடையில் தொடர்பு எதுவும் இல்லையென கூறுபவர்கள், பெண்களுடைய விடுதலைக்கான போராட்டத்தை அழிப்பதற்காகப் பொய் சொல்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 8-ஐ சர்வதேச பெண்கள் தினமாகக் கொண்டாடும் வழக்கத்தை முதலில் கொண்டு வந்ததே சோசலிச, கம்யூனிசத்திற்கான இயக்கத்தின் தலைவர்களாகிய உழைக்கும் பெண்கள் ஆவர்.

நூறாண்டுகளுக்கு முன்னர், மார்ச் 8, 1917 அன்று, போருக்கும், பசிக்கும், சார் மன்னனுடைய யதேச்சையதிகாரத்திற்கும் முடிவு கட்ட வேண்டுமென்று கோரி, இரசிய பெண்மணிகள் பெட்ரோகிராட் மற்றும் பிற நகரங்களின் வீதிகளில் குவிந்தனர். அன்று பெண்கள் நடத்திய மாபெரும் ஆர்பாட்டங்கள், சாரின் முடியாட்சியைத் தூக்கியெறிந்த ஒரு புரட்சிகர கிளர்ச்சிக்கு ஒரு சக்திவாய்ந்த ஊட்டமாக இருந்தது. அந்த ஆண்டு இரசியாவில் புரட்சி முன்னேற்றமடைய பெண்கள் தொடர்ந்து ஒரு முக்கிய பங்காற்றினர். அது, உழவர்கள் மற்றும் படை வீரர்களுடைய கூட்டுறவோடு தொழிலாளி வகுப்பு, மாபெரும் அக்டோபர் புரட்சியில் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற வழி வகுத்தது. புதிய சோசலிச அமைப்பைக் கட்டுவதற்கு அவர்கள் உழைக்கும் ஆடவரோடு தோளொடு தோள் சேர்ந்து உழைத்தனர்.

பெண்களுடைய விடுதலைக்கு பாட்டாளி வகுப்புப் புரட்சிப் பாதையும், சோசலிசமும் மட்டுமே சரியான பாதை என்பதை இரசியாவின் புரட்சிகர அனுபவம் காட்டியிருக்கிறது. அப்போதிலிருந்து, எல்லா நாடுகளைச் சேர்ந்த முதலாளிகள், பெண்களாக பெண்கள் ஒன்றிணைவதையும், சமுதாயத்திலுள்ள தொழிலாளி வகுப்பு மற்றும் பிற எல்லா ஒடுக்கப்பட்டவர்களோடும் ஐக்கியப்படுவதையும் தடுப்பதற்காக பல்வேறு வழிகளைத் தொடர்ந்து கண்டுபிடித்து வருகின்றனர். ஆடவர்களே அவர்களுடைய எதிரிகள் என்றும், பெண்களுடைய முக்கியப் போராட்டமானது குடும்பத்திற்குள்ளே அவர்களுடைய சமத்துவத்திற்கானது என்றும் பல கருத்துக்களை முன்னேற்றுவதன் மூலம் பெண்களுடைய இயக்கத்தைத் திசை திருப்ப அவர்கள் முயற்சித்து வருகின்றனர்.

உழைக்கும் பெரும்பான்மையான மக்களைப் பிளவுபடுத்தவும், அவர்கள் மீது ஆட்சி நடத்தவும், பெரும் நிலவுடமையாளர்கள் மற்றும் பிற கொழுத்த பிரிவினரோடு கூட்டணி சேர்ந்துள்ள நமது நாட்டை ஆளும் பெரும் முதலாளிகள், ஆங்கிலேய காலனிய ஆட்சியாளர்களிடமிருந்து அவர்கள் கற்றுக் கொண்ட பல்வேறு முறைகளைக் கையாண்டு வருகின்றனர். அவர்கள் திட்டமிட்ட முறையில் சாதி, மத, இன, தேச அடிப்படைகளில் மோதல்களைத் தூண்டி விட்டு வருகின்றனர். குறிப்பிட்ட சாதிகளுக்கும், சமூகங்களுக்கும் ஒதுக்கீடு என்பதன் மூலம் அவற்றிலுள்ள மேல் தட்டு மக்களை தன்னோடு சேர்த்துக் கொள்ளும் முறையை அவர்கள் கடைபிடித்து வருகின்றனர்.

பாராளுமன்றத்திலும், சட்ட மன்றங்களிலும் 33% ஒதுக்கீடு என்ற பழைய வாக்குறுதியை தற்போதைய மோடி அரசாங்கம் மீண்டும் திரும்பத் திரும்பக் கூறி வருகிறது. 1996-இலிருந்து பெண்கள் இயக்கத்தின் முன்னே இந்த காரட்டு தொங்கவிடப்பட்டு வருகிறது. அதனுடைய நோக்கமானது, போராடி வருகின்ற பெண்கள், தற்போதைய அமைப்போடு விட்டுக் கொடுத்துச் சமரமாகச் செல்ல வேண்டும் என்பதாகும். தற்போதைய அதிகாரக் கட்டுமானத்தில் ஒரு குறிப்பிட்ட சிலருக்கு இடமளிப்பதன் மூலம் இது, பெண்களுடைய போராட்ட ஒற்றுமையை உடைக்கும் நோக்கம் கொண்டதாகும்.

ஆளும் வகுப்பினருடைய இந்த சூழ்ச்சி குறித்து இந்தியப் பெண்கள் விழிப்புடன் இருக்க வேண்டுமென கம்யூனிஸ்டு கெதர் கட்சி உறுதியாக நம்புகிறது. பெண்களுடைய குறிக்கோளானது, தற்போதுள்ள பாராளுமன்றத்தில் ஒரு ஒதுக்கீட்டைப் பெறுவதல்ல. குறிக்கோளானது, தற்போதுள்ள வெட்டிப் பேச்சு பாராளுமன்றத்தை மாற்றி, உழைக்கும் பெண்களையும், ஆடவரையும் உண்மையிலேயே பிரதிநிதித்துவப் படுத்தும் ஒரு மன்றத்தைக் கொண்டு வருவதாகும். பெரு முதலாளிகள் மற்றும் பிற சுரண்டல் அதிபர்களின் ஆதரவு பெற்ற ஒரு அரசியல் மேல் தட்டைச் சேர்ந்தவர்களிடம் இல்லாமல், உழைக்கும் மக்கள் கைகளில் அதிகாரம் இருக்கக் கூடிய அரசியல் வழி முறையையும், ஒரு புதிய அரசையும் நிர்மாணிக்க அடித்தளங்களை அமைப்பது நம்முடைய நோக்கமாகும். அப்படிப்பட்ட தொரு அரசு மட்டுமே அனைவருக்கும் வளமையையும் பாதுகாப்பையும் உறுதி செய்வதோடு, பெண்களுடைய உரிமைகளையும், மாண்பையும் எவரும் மீற முடியாது என்ற உத்திரவாதத்தையும் அளிக்க முடியும்.

எல்லா வகையான சுரண்டலுக்கும் முடிவு கட்டுவதற்கு, குடியிருப்புப் பகுதிகளிலும், வேலை செய்யும் இடங்களிலும் பெண்களாகவும், தொழிலாளி வகுப்பு மற்றும் அதனுடைய புரட்சிகர இயக்கத்தின் ஒரு பிரிவினர் என்ற அடிப்படையிலும் பெண்கள் அணி திரள வேண்டும். உழைக்கும் பெண்கள், ஆடவர், மாணவ மாணவிகள் ஆகிய நாம், நம்முடைய வேலை செய்யும் இடங்களிலும், வளாகங்களிலும், குடியிருப்புப் பகுதிகளிலும் நம்முடைய சொந்தக் குழுக்களைக் கட்ட வேண்டும். நம்முடைய உரிமைகளுக்காகப் போராடுகின்ற அதே நேரத்தில், இந்தச் சமுதாயத்தினுடைய ஆட்சியாளர்களாக ஆவதற்கும் நாம் தயாரிப்புகளில் ஈடுபட வேண்டும்.

சர்வதேச மகளிர் தினமானது நியாயமற்ற போர்கள், சுரண்டல், ஒடுக்குமுறை, மக்களுக்கிடையே பால் அல்லது வேறு அடிப்படைகளில் பாகுபாடுகள் ஆகியன அறவே இல்லாத ஒரு புதிய உலகிற்காக போராடுவதற்குப் பெண்கள் உறுதி ஏற்றுக் கொள்ள வேண்டிய ஒரு நாளாகும்.

இந்தியாவின் மறுமலர்ச்சிக்காக, மக்கள் கைகளில் இறையாண்மையை கொண்டு சேர்க்கக் கூடிய ஒரு நவீன சனநாயக அரசிற்காகப் போராடுவதற்கு நாம் ஒன்றுபடுவோம்! சனநாயக, காலனிய எதிர்ப்பு, நிலவுடைமை எதிர்ப்பு மற்றும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான நிபந்தனையாக முதலாளித்துவத்தைத் தூக்கியெறிவதற்கு நாம் ஒன்றுபடுவோம்! புரட்சியின் மூலம் சோசலிசத்தைக் கட்டுவதற்கு நாம் ஒன்றுபடுவோம்!

சமுக முன்னேற்றத்திற்காகப் போராடுவதில் உறுதியாக இருக்கும் பெண்களை இந்திய கம்யூனிஸ்டு கெதர் கட்சியில் இணைந்து, தொழிலாளி வகுப்பு மற்றும் கம்யூனிசத்திற்கான புரட்சிகர இயக்கத்தை வலுப்படுத்த முன்வருமாறு அழைக்கிறோம்!

**பெண் விடுதலைக்கான போராட்டம் வாழ்க!**

**இன்குலாப் ஜிந்தாபாத்!** ■

## பகத் சிங்கினுடைய அறைகூவலை ...

இரண்டாம் பக்க தொடர்ச்சி

ஆட்சியும்" மாற்றமின்றி கட்டிக் காக்கப்பட்டு வருகிறது.

பகத் சிங்கினுடைய பாதையைப் பின்பற்றுவதென்றால், இந்திய சமுதாயத்தின் பிரச்சனைகளை, அறிவியல் ஆய்வின் அடிப்படையில் கூட்டு நடவடிக்கைகள் மூலம் தீர்ப்பது என்று பொருளாகும். முதலாளித்துவத்திற்கும், நிலவுடமை, காலனியம் மற்றும் ஏகாதிபத்தியத்தின் எல்லா மிச்ச மீதிகளுக்கும் முடிவு கட்டக் கூடிய ஒரு புரட்சிக்கு இந்தியா ஆவலோடு காத்திருக்கிறது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டுமென்பது அதனுடைய பொருளாகும்.

ஏகபோக குடும்பங்களின் தலைமையில் உள்ள பெரு முதலாளிகளுடைய ஆட்சிக்கு முடிவு கட்டி, தொழிலாளர்கள் - உழவர்களுடைய ஆட்சியைக் கட்டியமைப்பதன் மூலம் நாட்டின் வளங்கள் உழைக்கும் மக்களுக்குப் பயன்படுவதை உறுதி செய்யக்கூடிய ஒரு முழுமையான புரட்சி அவசியமாகும். புரட்சியானது, தற்போதுள்ள அரசை மாற்றி, கெதர் புரட்சியாளர்கள் விரும்பிய, தன்னார்வ அடிப்படையில் அமைந்த, முழுவதும் புதியதொரு அரசை நிறுவும். அப்போது தான் எல்லா இந்தியர்களும் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க முடியும்.

பாட்டாளி வகுப்பின் சர்வாதிகாரம் என்ற இந்த புதிய அரசு, உழைக்கும் மக்களுக்கு சுரண்டலிலிருந்து விடுதலையையும், நிலத்தை உழுபவர்களுக்கு பாதுகாப்பற்ற நிலையிலிருந்து விடுதலையையும், சாதி மற்றும் பாலின அடிப்படையிலான பாகுபாடுகள், தேசிய ஒடுக்குமுறை மற்றும் எல்லா வகையான துன்புறுத்தல்களிலிருந்து விடுதலையையும் உறுதி செய்யும். சுரண்டும் ஒரு சிறுபான்மையினர் மற்றவர்களுடைய உழைப்பின் பயன்களை உறிஞ்சி வாழும் "உரிமையையும்", பொருளாதார அடிப்படையையும் அகற்றுவதன் மூலம் அது இதை நிறைவேற்றும். ஏகாதிபத்திய அமைப்பிலிருந்து தெள்ளத் தெளிவாக அது பிரிந்து வந்து, ஏகாதிபத்தியத்திற்கு எதிராக உலகெங்கிலும் உள்ள எல்லா சக்திகளுடைய கூட்டணியோடு ஒரு சுய சார்பான சோசலிச பொருளாதாரக் கட்டுமானத்தை அது செயல்படுத்தும்.

**வீரத் தியாகிகள் பகத் சிங், ராஜ்குரு, சுக்தேவினுடைய கருத்துக்களும், செயல்களும் நீடூழி வாழ்க!**

**இன்குலாப் ஜிந்தாபாத்!** ■

# நூறாண்டுகளுக்கு முன்னர் - சர்வதேச மகளிர் தினத்தில்

ஆயிரக் கணக்கான பெண்கள் மார்ச் 8, 1917-இல் இரசியாவின் பெட்ரோகிராட் நகரத்தின் வீதிகளில் அணி வகுத்துச் சென்றனர். அவர்களில் சிலர் தொழிலாளர்களாகவும், சிலர் போர் வீரர்களுடைய மனைவியராகவும் இருந்தனர். அவர்கள் அனைவரும், "எங்களுடைய குழந்தைகளுக்கு உண்ண உணவு வேண்டும்" எனவும், "போர்முனையிலிருந்து எங்கள் கணவர்களைத் திருப்பியனுப்புங்கள்" என்றும் கோரினர். சார் மன்னனுடைய இரசியாவில், "உழைக்கும் பெண்களுக்கு வாக்குரிமை" என்ற முழக்கம் அப்போது பரவலாக எழுப்பப்பட்டது.

அந்த நேரத்தில் ஐரோப்பாவெங்கும் உழைக்கும் மக்களுக்கு தாங்க முடியாத நிலைமைகளை முதல் உலகப் போர் உருவாக்கியிருந்தது. 1915-இல் துவங்கி, கிளர்ச்சி அலை செர்மனியெங்கும் பரவியிருந்தது. குடும்பப் பெண்களுடைய கிளர்ச்சிகள் அடிக்கடியும், பல்வேறு நேரங்களிலும் ஆஸ்திரியா, இங்கிலாந்து, பிரான்சு, செர்மனி மற்றும் இரசியாவில் நடைபெற்று வந்தன. இரசியாவில் ஆடைத் தொழில் மையமாகிய போகோரோடிஸ்க் என்ற நகரத்தில் அக்டோபர் 1915 ஒரு சந்தை நாளில் கிளர்ச்சி வெடித்தது. பல வாரங்கள் நீடித்த ஒரு வேலை நிறுத்தப் போராட்டத்தை, 12,000 பெண் தொழிலாளர்கள் துவக்கினர்.

சூன் 1916-இல் இரசியாவின் கோர்டீவ்கா நகரில் ஓராயிரம் பெண்கள் கூட்டம் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். அவர்கள் ஒவ்வொரு கடையாக சென்று, கிடங்கைத்




திறக்குமாறு கடைக்காரர்களிடம் கோரினர். செர்மனியில் உள்ள போர் வீரர்களின் மனைவியர்களுடைய ஒரு கூட்டம், ஆகஸ்டு 1916-இல் ஒரு அமைதி உடன்படிக்கைக்கு ஆதரவு தெரிவிக்க வேண்டுமென ஹேம்பர்க் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கோரிக்கை எழுப்பினர். "நாங்கள் இனி மேலும் பசியில் வாட விரும்பவில்லை. எங்களுடைய கணவர்களும், பிள்ளைகளும் போரிலிருந்து திரும்பி வர வேண்டும்" என்று அவர்கள் எழுதினர்.

அந்த காலக் கட்டத்தில் நடைபெற்ற பெண்கள் ஆர்பாட்டங்களில் மிகவும் புகழ் பெற்ற ஆர்பாட்டம் மார்ச் 8, 1917-இல் நடைபெற்றது. ஆயிரக் கணக்கான பெண் தொழிலாளர்களும், குடும்பத் தலைவிகளும் காவல் துறையினரை எதிர்த்து எழுந்தனர். தங்களோடு சேர்ந்து கொள்ளுமாறு சாரிச இராணுவத்தின் போர் வீரர்களை அவர்கள் கேட்டுக் கொண்டனர். அதற்கு மறுநாள், 2 இலட்சம் பெண் மற்றும் ஆண் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். மக்கள் கூட்டம் அதிக அளவில் அரசியல் கோரிக்கைகளை எழுப்பியது. அவர்கள், "போர் ஒழிக", "சார் மன்னராட்சி ஒழிக" என்பன போன்ற முழக்கங்களை எழுப்பினர். கிளர்ச்சியாளர்களை ஒடுக்க வேண்டுமென கொடுக்கப்பட்ட கட்டளைகளை நிறைவேற்ற பெட்ரோகிராட் படை வீரர்கள் மறுத்துவிட்டனர்.

நூறாண்டுகளுக்கு முன்னர், மார்ச் 8 அன்று இரசியப் பெண்மணிகள் மேற் கொண்ட வீரமான செயல்பாடுகள், சார் மன்னனை தூக்கியெறிந்த பிப்ரவரி (இரசிய நாள் அட்டவணைப் படி) புரட்சியென அழைக்கப்படும் மக்கள் திரள் எழுச்சிக்கு ஒரு உணர்வூட்டும் நிகழ்ச்சியாக இருந்தது. ■

# சர்வ தேச மகளிர் தினத்தின் துவக்கம்

1910-இல் டென்மார்க்கில் உள்ள கோபன்ஹேகனில் நடைபெற்ற இரண்டாவது சர்வதேச சோசலிச மகளிர் கருத்தரங்கு, மார்ச் 8-ஐ சர்வதேச பெண்கள் தினமாகக் கொண்டாடும் பாரம்பரியத்தை நிறுவியது. 17 நாடுகளிலிருந்து வந்திருந்த 100-க்கும் மேற்பட்ட பெண் பிரதிநிதிகளால் இந்தத் தீர்மானம் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது. அந்த பிரதிநிதிகளில் பின்லாந்தின் பாராளுமன்றத்திற்கு முதல்முறையாக தேர்வு செய்யப்பட்ட 3 பெண்மணிகளும் அடங்குவர். 1907-இல் செர்மனி ஸ்டுட்கார்ட்-இல் நடைபெற்ற முதல் சர்வதேச சோசலிச மகளிருடைய கருத்தரங்கில் உழைக்கும் பெண்களுக்கும், பெண்களுடைய உரிமைகளுக்கும் ஆதரவாக ஒவ்வொரு ஆண்டும் ஆர்பாட்டம் நடத்த வேண்டுமென்ற கருத்தை முதலில் முன்வைத்த கிளாரா ஜெட்கின் தான், சர்வ தேச மகளிர் தினம் குறித்த தீர்மானத்தையும் முன்வைத்தார்.

அந்தத் தீர்மானங்களில் ஒன்று "எல்லா நாடுகளிலும் உள்ள சோசலிச மகளிர் இயக்கம் முதலாளி வகுப்பின் பெண்ணுரிமையாளர்களோடு சேராமல், சோசலிச கட்சிகளோடு கூட்டாகப் போராடி வருகிறார்கள். அவர்கள், வாக்குரிமையை சனநாயகப்படுத்துவதற்காக மிகவும் முக்கியமான கோட்பாடு மற்றும் நடைமுறையின் அடிப்படையில் பெண்களுக்கு வாக்குரிமை கோரிக்கையையும் முன்வைத்துப் போராடி வருகின்றனர்" என்று கூறுகிறது.

பெண்களுடைய அரசியல் அதிகாரத்தை முன் கொண்டு செல்ல, மேற் கூறப்பட்ட கோட்பாடுகளின்படி உழைக்கும் மக்களிடையே ஓய்வு ஒழிவின்றி போராட வேண்டியது எல்லா நாட்டு சோசலிச பெண்களுடைய கடமையாகும். சமூகத் தேவை குறித்தும், மகளிர் அரசியல் விடுதலை பெற வேண்டியதன் முக்கியத்துவம் பற்றியும் கருத்துரைகள் மூலமாகவும், புத்தகங்கள் மூலமாகவும் பரப்புரை செய்வதும், அதற்கு ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்துவதும் அவசியமாகும். அந்த பரப்புரைக்கு, எல்லா வகையான அரசியல் மற்றும் பொது மன்றத் தேர்தல்களை முக்கியமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்."

"தத்தம் நாடுகளிலுள்ள வகுப்பு உணர்வு கொண்ட பாட்டாளி வகுப்பினருடைய அரசியல் மற்றும் தொழிற் சங்கங்களின் புரிந்துணர்வோடு, எல்லா தேசங்களையும் சேர்ந்த சோசலிசப் பெண்கள் சிறப்பாக ஒரு பெண்கள் தினத்தை ஏற்பாடு செய்து நடத்த வேண்டும். அது முதலாவதாக பெண்களுக்கு வாக்குரிமை கேட்டு பரப்புரை நடத்த வேண்டும். இந்தக் கோரிக்கையை ஒட்டுமொத்த பெண்கள் பற்றிய கேள்வியோடு, சோசலிச கருத்தியல் அடிப்படையில் விவாதிக்க வேண்டும்" என பிரதிநிதிகள் தீர்மானித்தனர். ■

### வங்கி நெருக்கடிக்குத் தீர்வு ...

நான்காம் பக்க தொடர்ச்சி

திருப்பியடைக்காத எல்லா முதலாளிகளுடைய பெயர்களை இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட வேண்டும் என்பதும், அவர்கள் செலுத்த வேண்டிய கடன்களை மீட்பதற்காக அவர்களுடைய சொத்துக்களை இந்திய அரசாங்கம் கைப்பற்ற வேண்டும் என்பதும் ஆகும். இன்னொரு தீர்வானது, வாராக் கடன்களை அங்கீகரித்ததற்கும், அப்படிப்பட்ட கடன்களுக்கு ஒப்புதல் பெறுவதற்காக கடன் வாங்கிய முதலாளிகளோடு ஒத்துழைத்தவர்களையும் வங்கி நிர்வாகத்திலும், அதனுடைய உயர்மட்ட இயக்குனர்களிலும் அதிகாரப் பொறுப்பை உறுதிப்படுத்தி அவர்களுக்கு தண்டனை வழங்குவதாகும்.

"தகவல் அறியும் சட்டத்தின் கீழ் மக்கள் கேட்கும் விவரங்களை அளிக்க வேண்டுமென" உச்ச நீதி மன்றம் தெளிவுபடுத்தியிருந்துங்கூட, கடனைத் திருப்பியடைக்க மறுக்கும் முதலாளிகளின் பெயர்களை வெளியிட ஆர்பிஐ மறுத்து வருகிறது.

முதலாளித்துவப் பேராசையை நிறைவு செய்வதற்காக இருக்கும் நிலைமையை மாற்றி, மக்களுடையத் தேவைகளை நிறைவேற்றும் வகையில் வங்கித் துறையையும், பொருளாதாரத்தின் மற்ற எல்லா துறைகளையும் மாற்றியமைப்பது தொழிலாளி வகுப்பின் முக்கிய குறிக்கோளாகும். வங்கிகளின் எல்லா செயல்பாடுகளும், சமூக உற்பத்தியின் தேவைகளை நிறைவேற்றுவதற்கும், தனிப்பட்டவர்களுடைய தேவைகளான பாதுகாப்பான வைப்புகள் மற்றும் அவசரத் தேவைகளை சந்திப்பதற்கான கடன்கள் ஆகியவற்றை நிறைவேற்றும் வகையிலும் திருத்தியமைக்கப்பட வேண்டும். வங்கிக் கடன்கள் மீது வசூலிக்கப்படும் வட்டி, திருப்பியடைக்கக் கூடிய திறனோடு தொடர்புடையதாக இருக்க வேண்டும், "அபாய நிலை"யைப் பொறுத்ததாக இருக்கக் கூடாது. சாராம்சத்தில், வங்கித் துறையை முழுவதுமாக மாற்றியமைப்பதில் தீர்வு உள்ளது.

1969-இல் பல தனியார் வங்கிகள், தேசியமயமாக்கப்பட்ட போது, அப்போதிருந்த இந்திரா காந்தி தலைமையிலான காங்கிரசு அரசாங்கம், அதை ஒரு சோசலிச சீர்திருத்தம் என்று கூறியது. ஆனால் அது அந்த நேரத்தில், ஏகபோக முதலாளிகளுடைய திட்டத்தின் ஒரு அங்கமாகும் என்பதை வாழ்க்கை அனுபவம் வெட்ட வெளிச்சமாக்கியது. கிராமப் புறங்களில் ஆயிரக் கணக்கான வங்கிக் கிளைகளை அரசு தன்னுடைய செலவில் நிறுவ வேண்டும் என்பதும், அதன் மூலம் கிராமப்புற சேமிப்புக்களை தங்கள் கைகளில் குவித்துக் கொள்ளவும் அவர்களுக்கு அது தேவைப்பட்டது.

தொண்ணூறுகளிலிருந்து, தாராளமயம், தனியார் மயம் மூலம் உலகமயமாக்கும் தட்டியின் கீழ், ஏகபோகக் குடும்பங்கள் ஒரு புதிய திட்டத்தைக் கடைபிடித்து வருகிறார்கள். வங்கித் துறையைப் பொறுத்த மட்டிலும், அவர்களுடைய நோக்கமானது, இலாபத்தை உயர்த்துவதும், மிகவும் இலாபகரமான வங்கிகளைத் தங்களுடைய தனிப்பட்ட பேரரசின் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதும் ஆகும்.

தொழிலாளி வகுப்பின் குறிக்கோளானது, வங்கியை சமூகமயப்படுத்துவதாகும். தேசியமயமாக்குவது அவசியமானது என்றாலும், அது போதுமானதல்ல. வங்கிகளை அரசாங்கத்தின் உடமையாக கொண்டு வருவது மட்டுமின்றி, அரசாங்கத்தையும் அரசின் மற்ற நிறுவனங்களையும் மக்களுடைய கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர வேண்டும். வங்கித்துறையில் சமூக உடமையையும் கட்டுப்பாட்டையும் நிறுவுவதற்காகவும், முதலாளித்துவ பேராசைக்கு பதிலாக மனிதத் தேவைகளை நிறைவேற்றும் வகையில் பொருளாதாரத்தைத் திருத்தியமைக்கவும் உழவர்கள் மற்றும் பிற உழைக்கும் மக்களுடைய கூட்டணியோடு தொழிலாளி வகுப்பு அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும். ■

### வாசகர்களுக்கு வேண்டுகோள்

உழைக்கும் மக்களின் வாழ்க்கை மற்றும் போராட்டங்களைப் பற்றிய செய்திகள், நிகழ்வுகள், கட்டுரைகளை அனுப்பி வையுங்கள்.

e-mail: Workers.Paper@gmail.com

# தொழிலாளர் ஒற்றுமைக் குரல்

இந்திய கம்யூனிஸ்டு கெதர் கட்சி – மத்தியக் குழுவின் இதழ்

RNI No. TNTAM/2010/34501
Postal Regd. No. KOL/014/2012-14, renewed upto Sep 2017
Mailing on 25th, 26th of Every Month
Date of publication - 04-4-2017

பெறுநர் ..........................................................

ஆசிரியர் மற்றும் அச்சிட்டு வெளியிடுபவர், இ.சரவணமுத்துவேல் அச்சகம்: மூர்த்தி பிரிண்டர்ஸ், 500-பி, மெயின் ரோடு, கோவில்பட்டி–628502 வெளியிடும் இடம்: 358, வள்ளுவர் நகர், 1-ஆம் தெரு (கிழக்கு), கோவில்பட்டி–628501
ஆண்டுச் சந்தா ரூ. 50 மட்டும்.
தொடர்புக்கு -9486607248 மின்னஞ்சல் - tozhilalar.ottrumai.kural@gmail.com


# அடிப்படை அரசியல், தேர்தல் சீர்திருத்தங்களுக்காக சென்னையில் விவாதக் கூட்டம்



"ஊழல்வாதக் கட்சி அரசியலை வேரறுத்து, மக்களே ஆட்சி செய்ய வழி வகுப்போம்!" என்ற தலைப்பில் அரசியல் மற்றும் தேர்தல் வழிமுறைகளில் தேவைப்படும் அடிப்படை மாற்றங்களைப் பற்றி விவாதிப்பதற்காக 15-க்கும் மேற்பட்ட மக்கள் அமைப்புக்களைச் சேர்ந்த செயல்வீரர்கள் சென்னையில் மார்ச் 19 அன்று ஒன்று கூடினர்.

மக்களாட்சி இயக்கம், தொழிலாளர் ஒற்றுமை இயக்கம், காந்தியன் இனிஷியேட்டிவ் பார் சோசியல் டிரான்பர்மேஷன், சுயராஜ் அபியான், ஊழலுக்கு எதிரான கூட்டணி, வளமான தமிழகம் கட்சி, சிறுபான்மை மக்கள் இயக்கம், தொழிலாளர் போராட்ட இயக்கம், தி-நகர் குடிமக்கள் குழு, சபரி கிரீன் பவுண்டேஷன், பேக்ட் இந்தியா, பாபுலர் பிரன்ட் ஆப் இந்தியா, இந்திய சோசியல் டெமாகிரடிக் கட்சி, சோசியல் டெமாகிரடிக் தொழிற் சங்கம், இளைஞர்கள் மீட்புக் களம், காந்திய சம தர்ம இயக்கம், 5-வது தூண் ஆகிய அமைப்புக்களும், பல தனிப்பட்டவர்களும் இந்த விவாதத்தில் பங்கேற்றனர்.

பேச்சாளர்கள், இன்றைய அரசியல் சூழ்நிலையையும், அண்மையில் நடைபெற்ற 5 மாநில சட்டமன்றத் தேர்தல்கள் குறித்தும் ஆய்வு செய்தனர். வாக்களிப்பது தவிர இன்றுள்ள அரசியலில் மக்களுக்கு எந்த உரிமைகளும் இல்லையென்று அவர்கள் கூறினர். பணபலம், குண்டர் பலம், ஊடகங்களுடைய பலத்தைப் பயன்படுத்தி தற்போதுள்ள நிறுவனத்தின் அரசியல் கட்சிகள், மக்கள் தங்களுடைய தினசரி பிரச்சினைகுத் தீர்வு காண்பதையும், நாட்டை நடத்துவதில் ஒரு மையப் பங்கு வகிப்பதையும் தடுத்து வருகின்றனர். அவர்கள் விரும்பியவாறு தேர்தல் முடிவுகளைப் பெறுவதற்காக, தேர்தல் வாக்களிக்கும் கருவிகள் சூழ்ச்சியாகக் கையாளப்பட்டு வருவதாகப் பங்கேற்ற பலரும் குறிப்பிட்டனர்.

அரசியலிலும், தேர்தல் சீர்திருத்தங்களிலும் ஒரு மேலோட்டமான மாற்றங்களை மக்கள் எதிர்பார்க்கவில்லையென பங்கேற்றவர்கள் சுட்டிக் காட்டினர். அரசியல் வழிமுறையில் ஒரு அடிப்படையான மாற்றத்திற்காக நாம் வேலை செய்ய வேண்டும். வேட்பாளர்களை முடிவு செய்யவும், அவர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுக்கவும் உரிமை, தேர்ந்தெடுத்தப் பிரதிநிதியைத் திருப்பியழைக்கின்ற உரிமை, சட்ட வரைவுகளை முன்வைக்கும் உரிமை ஆகியவற்றை நாம் கோர வேண்டும். அரசாங்கத்தின் எந்த ஒரு குறிப்பிட்ட கொள்கை அல்லது செயல்பாடு குறித்து மக்களுடைய கருத்துக்களை அறிவதற்காக கருத்துக் கணிப்புக்களை நடத்துவது குறித்தும் விவாதிக்கப்பட்டது.

இளைஞர்கள், பெண்கள், உழவர்கள் மற்றும் தொழிலாளிகள் என மக்களின் பல்வேறு பிரிவினர் சந்தித்து வரும் கடுமையான நெருக்கடி குறித்தும் பங்கேற்றவர்கள் பேசினர். இந்தப் பிரச்சனைகள் குறித்த விவாதங்களை மக்களிடம் எடுத்துச் செல்ல வேண்டுமெனவும், அரசியலில் மக்கள் தங்களுடைய உரிமைகளை நிலைநாட்டுவதற்காக அவர்களைக் குழுக்களாக அணி திரட்ட வேண்டுமெனவும் பங்கேற்றோர் தீர்மானித்தனர். சாதி, மத, வகுப்புவாத, மொழி மற்றும் பிற அடிப்படைகளைக் கடந்த அளவில் மக்களுடைய ஒற்றுமையை வலுப்படுத்த எல்லா நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டுமென அவர்கள் முடிவெடுத்தனர்.

இந்தக் கருத்துக்களை மக்களிடையே பரப்புவதற்காக, நடை பயணங்கள், வாகனப் பயணங்கள், பொதுக் கூட்டங்கள், மின்னணு, சமூக ஊடகங்கிலும், செய்தித் தாட்களில் எழுதுவது, என்பன போன்ற திட்டங்களை நாம் மேற் கொள்ள வேண்டுமெனவும் அவர்கள் தீர்மானித்தனர்.

மக்களுடைய விழிப்புணர்வை உயர்த்தும் வகையில் ஒருங்கிணைந்து வேலை செய்ய வேண்டுமென்ற உறுதியான முடிவோடு விவாதம் நிறைவு பெற்றது. ■

# எண்ணெய் தேடுதலுக்கு எதிராக தமிழ்நாட்டில் ஆர்பாட்டம்

நாடெங்கிலும் உள்ள 44 இடங்களில் எண்ணெய் மற்றும் எரிவாயு எடுப்பதற்கும் அதை விரிவுபடுத்துவதற்கும் ஒப்பந்தங்களை மத்திய அரசு பிப்ரவரி 14 அன்று அறிவித்தது.

அறிவிப்பு வெளிவந்தவுடன், இந்த ஒப்பந்த இடங்களில் ஒன்றான தமிழ் நாட்டின் தெற்குப் பகுதியில் உள்ள புதுக் கோட்டை மாவட்டத்திலுள்ள நெடுவாசல் கிராமத்தில் எதிர்ப்புப் போராட்டங்கள் வெடித்தன. அங்கு எண்ணெய்யையும், எரிவாயுவையும் எடுப்பதற்காக 10 சதுர கி.மீ பரப்பளவுள்ள நிலம் ஒரு தனிப்பட்ட ஒப்பந்ததாரருக்குக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. இந்த நெடுவாசல் ஒப்பந்தமானது கருநாடகாவில் உள்ள ஜெம் லெபாரட்டரிஸ் என்ற நிறுவனத்திற்கு கொடுக்கப்பட்டுள்ளது. சிறிய மற்றும் நடுத்தர எண்ணெய்க் கிணறுகளில் பங்கேற்பதற்கு தனியார் துறையை அழைக்கும் நோக்கம் கொண்ட மார்ஜினல் பீல்ட் பாலிசி என அக்டோபர் 2015-இல் இந்திய அரசு கொண்டுவந்த கொள்கையின் ஒரு அங்கமாகும் இது.

இந்த ஆர்பாட்டத்தில் நெடுவாசல் கிராம மக்களோடு, சுற்றுப் புறத்திலுள்ள 30-க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த ஆயிரக் கணக்கான ஆடவர்களும், பெண்களும் கடந்த சில வாரங்களாக பங்கேற்று வருகின்றனர். சுற்றுப்புற ஆர்வலர்களும், மாணவர்களும், மற்றும் பிறரும் கூட இந்த ஆர்பாட்டங்களில் இணைந்துள்ளனர்.

நிலத்தடி நீர் நிறைந்துள்ள ஒரு பகுதியில் நெடுவாசல் அமைந்துள்ளது. செழுமையான இந்தப் பகுதியில் ஒரு வளமையான பல பயிர்களை உள்ளடக்கிய வேளாண் பொருளாதாரம் இருக்கிறது. நெடுவாசலிலிருந்து, 100 கிமீ வட்டாரத்தில் ஓஎன்ஜிசி 100-க்கும் மேற்பட்ட எண்ணெய்க் கிணறுகளையும், பிறவற்றையும் செயல்படுத்தி வருகிறது. நாகைப்பட்டினம், திருவாரூர், தஞ்சை போன்ற மாவட்டங்களில் நடைபெற்றுவரும் எண்ணெய் தேடுதல் முயற்சிகளுடைய மோசமான அனுபவங்களிலிருந்து நெடுவாசலையும், அதையொட்டிய கிராமங்களிலும் உள்ள மக்கள் படிப்பினைகளைப் பெற்றிருக்கின்றனர். அதனால் மக்களுடைய உயிருக்கும், வாழ்வாதாரத்திற்கும் மிக மோசமான அபாயங்கள் நிறைந்திருக்கின்றன என்பதை அவர்கள் அறிவார்கள்.

காற்றும், நீரும் மாசுபடுதல், நிலத்தடி நீர் வரண்டுபோதல், நெஞ்சக நோய்கள் அதிகரித்தல், வேளாண்மை நிலங்கள் தரிசு நிலங்களாக ஆதல், பாதிக்கப்பட்ட நிலங்களை மீட்டமைப்பதில் குறைபாடுகள் போன்ற பிரச்சனைகள் குறித்து மக்கள் கவலை அடைந்திருக்கிறார்கள். அந்த இடங்களில் இழப்பீட்டுத் தொகைக்காக உழவர்கள் பதிவு செய்த விண்ணப்பங்கள் இன்னும் நிலுவையில் இருக்கின்றன.

குறிப்பிட்ட நிகழ்வுகள் மக்கள் நினைவில் பசுமையாக இருந்து கொண்டிருக்கின்றன. நெடுவாசலுக்கு அருகில் 2008-09 இல் ஓஎன்ஜிசி நிறுவிய ஒரு தேடுதல் கிணற்றிலிருந்து வெளியேறிய எரிவாயுக்கள் அது தோண்டப்பட்ட பின்னர் 3 மாதங்களுக்கு மேல் தொடர்ந்து எறிந்து கொண்டே இருந்தன. எண்ணெய்க் கழிவுகள் நிரம்பிய பள்ளங்கள், ஏழாண்டுகளுக்கு திறந்தே கிடந்தன. மிகுதியாக மழை பெய்த போது, இந்தக் குட்டைகளிலிருந்த கழிவுகள் வெளியே பாய்ந்து அக்கம் பக்கத்திலிருந்த நிலங்களையும் மாசு படுத்தியது. நிலத்தடியிலுள்ள கச்சா எண்ணெய் குழாய்களிலிருந்து கசிந்து வந்த கச்சா எண்ணெய் பயிர்களை மோசமாக பாதித்தது. அது பாசன கால்வாய்களையும், நிலத்தடி நீரையும் மாசுபடுத்தியது. எண்ணெய் வெளியேற்றத்தால் பாதிக்கப்பட்ட நிலங்கள் எப்போதுமே மீட்டெடுக்கப்பட வில்லை. வெற்றி பெறாத கிணற்று நிலங்கள், அப்படியே விடப்பட்டதால், 2000 ஏக்கருக்கும் மேற்பட்ட செழுமையான வேளாண்மை நிலங்கள் தரிசு நிலங்களாகின.

எண்ணெய் தேடுதல் திட்டத்தால் பாதிக்கப்பட்ட மக்களுடைய நல்வாழ்வை நாங்கள் கவனித்துக் கொள்ளுவோமென அதிகாரிகள் கொடுக்கும் பொய்யான வாக்குறுதிகளை நெடுவாசல் மற்றும் சுற்றுப்புற கிராம மக்கள் நம்பத் தயாராக இல்லை. ■